விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலையலைவத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-5224)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 11 வெள்ளிக்கிழமை (25.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

## எமது உரிமைகளை அரசு தந்த பின்பே
# மத்திய அரசுடன் இணைந்து
# பணியாற்ற எம்மால் முடியும்

## பிரித்தானிய தென்னாசிய திணைக்கள தலைவரிடம் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது உரிமைகளை அரசாங்கம் தந்த பின்னர் நாம் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து செயலாற்ற முடியும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரித்தானியாவின் தென்னாசிய திணைக்களத் தலைவரும் இந்திய ஒருங்கமைப்பாளரும் ஆகிய ஃபேர்கஸ் ஔல்ட்டிடம் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த, கோத்தாவை தண்டிக்க கோரி

### ஜனாதிபதி செயலகத்துக்கு முன் காளிக்கு பூஜை

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமைக்கு, மகிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும் தான் பொறுப்புக்கூற வேண்டும்என, பிரகீத் எக்னெலிகொடவின் 23

## நெல்லியடியில் கைக்குண்டு கண்டுபிடிப்பு



23

## வர்த்தக கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மிகப்பாரிய நுகர்வோர் வர்த்தக கண்காட்சி 10ஆவது தடவையாக இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இலங்கை மாநாட்டு அலுவலகம் மற்றும் யாழ்.மாநகர சபை சர்வதேச வர்த்தக மன்றம் ஆகிய 24

## அரசியல் அமைப்பு தொடர்பில்
## தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்த மகிந்த முயற்சி

### சிவில், சமூக தொழிற்சங்க ஒன்றியம்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு யோசனை தொடர்பில் தேரர்களின் மத்தியில் தவறான கண்ணோட்டத்தினை உருவாக்குவதனூடாக அனைத்து இனமக்கள் மத்தியிலும் இனவாத பிரச்சினையை உருவாக்கி எதிர்க்கட்சி தலை 23

## நீராவியடி கோவில் வளாகத்தில் புத்தர் சிலை அமைக்கும் பணிக்கு

### நீதிமன்றம் இடைக்காலத் தடை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் புத்தர் சிலை அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நேற்று இடைக்காலக் கட்டளை வழங்கியுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள நிலையில் புத்தர் சிலை அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த பிக்குவால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 10

## சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் மைத்திரிபால சிறிசேன சந்திப்பு



(கொழும்பு)

சிங்கப்பூருக்கு உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யாகூப் அம்மையாருக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு சிங்கப்பூர் இஸ்தானா மாளிகையில் 24

## 6 ஆயிரத்து 972 லீற்றர் எதனோல் ஏழாலை பகுதியில் கைப்பற்றப்பட்டது

### யாழில் பனம் சாராயத்தில் கலப்படம் செய்ய கண்டியிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உற்பத்தியாகும் பனம் சாராயத்தை விநியோகிக்கும் மதுபான சாலை உரிமையாளர் ஒருவருக்கு எடுத்து வரப்பட்ட 20 லீட்டர் கொள்ளளவுடைய 371 கான்களில் இருந்து சுமார் 6 ஆயிரத்து 972 லீற் 24



## போதை வாங்குவதற்காக நகை திருட்டில் ஈடுபட்டவர்

### யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வந்த நகைத் திருட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இரு 23



## அரச ஊழியர்களின் கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

12 வருடங்களுக்கு பின்னர் அரச ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவுகளை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் 23

## புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் பிரதான கட்சிகளின் அக்கறை போதாது





### அவுஸ்திரேலிய, ஜப்பான் தூதுவர்களிடம் சம்பந்தன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் இரண்டு பிரதான கட்சிகள் காட்டும் அக்கறை போதுமானதாக இல்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜப் 23

## யாழ்.போதனாவில் மீண்டும் பாஸ் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட இருவர் மட்டுமே அனுமதிக்கப்படு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 172ஆவது இசை ஆராதனை விழா



# அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம் : இன்று (25.01.2019) வெள்ளி பி.ப. 5.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (சி-5293) கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்

## வடக்கில் கண்ணி வெடி அகற்ற ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் 624.382 அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக 100 மில்லியன் இலங்கை ரூபாய்) மானிய நிதியுதவி வழங்கியுள்ளது. இதற்கான உடன்படிக்கை நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரின் வாசஸ்தலத்தில் கைச்சாத்திடப்பட்டது. (ம-3)


## நெல் வெட்டும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் தற்போது பாவனையில் உள்ள Super Danxia 2200. நெல் அருவி வெட்டும் இயந்திரம் 'சிறந்த நிலை' இழுவைப் பெட்டியுடன் உடன் விற்பனைக்கு உண்டு. விலை ஐந்து இலட்சம். இடம்: கிளிநொச்சி

தொடர்பு: 0776629808 (சி-5290)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


## பாராட்டி வாழ்த்து



### திரு.சின்னராசா கர்ணன் (BA, PGDE)

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சிறந்த ஆசிரியருக்கான குரு பிரதீபா பிரபா நல்லாசிரியர் விருதினை பெற்றுக்கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியரான திரு.சின்னராசா கர்ணன் ஆசிரியர் அவர்களை மேலும் பல விருதுகளைப் பெற்று மேன்மேலும் வளர உளமார வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* பாடசாலைச் சமூகம், யா/ உயரப்புலம் மெ.மி. வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

(7264)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கு.சுதாகரன் (SLPS III)
(பிரதி அதிபர்) இடைநிலைப்பிரிவு
B.A Hons (Hr.sp), PGDE, M.Ed



திரு.து.அயூரன்
(NDTE, BA, PGDE, M.Ed)



திரு.யோ. சிவகோணேசலிங்கம்
(Dip in Media, B.Ed, M.Ed)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணி (M.Ed) பட்டம் பெற்ற மேற்படி எமது பாடசாலையின் பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை

(C-5292)

ஸ்ரீ வைகுண்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமத் நாராயணபதியின் பாத கமலத்தை பூஜிக்கும் பெரும்பேறு பெற்ற என் தாய்க்கு பூவுலகில் மானுட உருவெடுத்த மோகனதாஸ் துறவியின் அருள் மிகு தெய்வீக ஆராதனை



விளம்பி வருடம் மார்கழி மாதம் 24-ம் நாள் திங்கட்கிழமை ஸ்ரீ வைகுண்டப் பேறெய்திய

## திருமதி நவரத்தினம் தம்பிராசா ஈஸ்வரி

அறுபது வருடங்கள் உன் கைபிடித்து நடந்து வந்த நான் வெள்ளிவிழாவில் கால் பதிக்கும் நேரம் எனைப் பிரிந்து வைகுண்ட பதியின் கமலத்திருப்பாதங்களில் சரணடைந்து விட்டீர்களே அம்மா, வெள்ளிவிழா என்பது ஒருவரது வாழ்க்கையின் மறுபிறவி. சஷ்டியப்பூர்த்தியின் போது கடந்து வந்த காலத்தில் பெற்ற அனுபவங்களின் முதிர்ச்சியுடன், புதிய திட்டங்களை வகுத்து புதுயுகம் நோக்கி அடியெடுத்து வைக்கும் நேரம் கைபிடித்து வழிகாட்ட நீங்கள் இல்லையே அம்மா. பெருமாளின் ஆசீர்வாதம் உங்களூடாக கிடைக்க வேண்டுகின்றேன்.

பூவுலகில் மானுடராக அவதரித்த பெருமாளுக்கே இராம அவதாரத்தில் 14 வருடம் வனவாசம். கிருஷ்ண அவதாரத்தில் பஞ்சபாண்டவர்க்கு ஒரு வருடம் அஞ்ஞானவாசம் உட்பட 14 வருடம் வனவாசம். தினமும் பெருமாளை பூஜிக்கும் எனக்கு என்ன விதிவிலக்கா. அலை கடலென சோதனைகள் அடுக்கடுக்காக வந்த போதும் அவற்றை எதிர்கொள்ளும் பாக்கியத்தை அருளியது தாய்த் தெய்வத்தின் வளர்ப்பும் சுவாமிகளின் ஆசீர்வாதங்களும் பெருமாளின் அருட்கடாட்சமுமே.

என் வாழ்க்கையின் மிகக்கொடுமையான நேரம் பாலூட்டி சீராட்டி தன் இதயத்தில் என்னைச் சுமந்த என் அன்புத் தாய்க்கு இறுதிக்கிரியை என்ற பெயரில் அக்கினி பகவானிடம் சுவாகா கொடுத்து வைகுந்தத்திற்கு அனுப்பி வைத்த நேரம் என் உயிர் பதறி நடுநடுங்கி இதயம் உருகி வழிந்து தவித்து நின்ற நேரம் அருகில் நின்று அன்பு செலுத்திய உறவினர்கள், நண்பர்கள், ஆசி வழங்கிய குருவானவர்கள், அன்பர்கள், திணைக்களத் தலைவர்கள், வைத்தியர்கள், வர்த்தகப் பெருமக்கள், பத்திரிகையாளர்கள், அனைத்து அரசியல் பிரமுகர்கள் என அனைத்து என் உயிரிலும் மேலான உடன் பிறப்புக்களே, கடல் கடந்து லண்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், யப்பான், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து தொலைபேசி மூலமாகவும் நவீன இலத்திரனியல் சாதனங்களூடாகவும் ஆறுதலும் அஞ்சலியும் செலுத்திய உறவினர்கள், நண்பர்கள் என அனைத்து அன்பு உள்ளங்களின் அளப்பெரிய அன்பை எண்ணி நெகிழ்ந்து போகின்றேன். உங்கள் ஆறுதல் வார்த்தைகள் என்னைப் புதிய உத்வேகத்துடன் மீண்டும் எழ வழிவகுத்துள்ளது. எம் உயிர் உள்ளவரை உங்கள் அன்பை மறக்கமாட்டோம்.

இன்று (25.01.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மடாலயபதியும் மானுட உருவில் எம்முடன் வாழும் தெய்வத் துறவி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் எமது தாயாரின் வைகுந்தப்பேறு எய்திய சிறப்பு ஆராதனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்து சந்நிதி முருகன் அருளையும் துறவியின் ஆசீர்வாதத்தையும் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கலாநிதி ந.யோகராஜன் (SLTES Class I)**
தொழில்நுட்பக்கல்வி பயிற்சி திணைக்கள தலைமைச் செயலக பணிப்பாளரும் வட மாகாண இணைப்பாளரும் யாழ். மாவட்ட அமைப்பாளரும்.

**திருமதி மாலதி யோகராஜன் (JP)**
திருமணப் பதிவாளர்,
வலிகாமம் கிழக்கு, உரும்பிராய்.
077 337 4313, 021 223 0929



(C-5295)

# இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்பிற்காக சிங்கப்பூரிடமிருந்து தொழில்நுட்ப உதவிகள்

## ஜனாதிபதி மைத்திரியிடம் அந்நாட்டு அதிகாரிகள் இணக்கம்





(சிங்கப்பூர்சிற்றி)

**போதைப்பொருள் ஒழிப்பிற்காக சிங்கப்பூர் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படும் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அறிமுகப்படுத்த அந்நாட்டு அதிகாரிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இணக்கம் தெரிவித்தனர்.**

சிங்கப்பூருக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சிங்கப்பூர் அரசாங்கத்தின் சமூக, குடும்ப மேம்பாட்டு அமைச்சரும் தேசிய அபிவிருத்தி பிரதியமைச்சருமான டெஸ்மன் லீ (Dasmond Lee) உள்ளிட்ட அந்நாட்டின் போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் மெண்டரின் ஓரியன்டல் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் போதைப்பொருள் ஒழிப்பிற்கு உதவுமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் போதைப்பொருள் ஒழிப்பிற்காக இலங்கை முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டத்திற்கு சிங்கப்பூர் ஒத்துழைப்பு வழங்குவது குறித்து ஆராய்வதற்காக சிங்கப்பூர் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விசேட பிரதிநிதிகள் சிலர் விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

சிங்கப்பூர் அரசாங்கம் போதைப்பொருள் சுற்றி வளைப்பு தொடர்பில் பின்பற்றுகின்ற நடைமுறைகள் குறித்தும் சட்டவிரோத போதைப் பொருட்களை ஒழிப்பதற்காக அந்நாட்டு அரசாங்கம் முன்னெடுத்துவரும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் ஜனாதிபதிக்கு அந்நாட்டு அதிகாரிகள் விளக்கமளித்ததுடன், போதைப்பொருள் ஒழிப்பிற்காக அந்நாட்டின் அமைச்சுக்கள் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்துவரும் போதைப்பொருள்பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, போதைப் பொருள் ஒழிப்பிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் பொலிஸ் அதிகாரிகளை பாராட்டி அவர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சிங்கப்பூர் அரசாங்கத்தின் சமூக, குடும்ப மேம்பாட்டுத் துறை அமைச்சரும் தேசிய அபிவிருத்தி பிரதியமைச்சருமான டெஸ்மன் லீ, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புத்துறை சிரேஷ்ட பணிப்பாளர் [illegible] யங் ஏர்ன் (Ling Young [illegible]rn), மத்திய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் பதில் கடமை புரியும் பணிப்பாளர் செபஸ்டியன் டேன் (Sebastian Tan), மத்திய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தொடர்பாடல் துறை பணிப்பாளர் சென்ங் சேர்ன் ஹோங் (Sng Chern Hong) ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

## படைப்புழு குறித்து விழிப்புணர்வு பேரணி



(யாழ்ப்பாணம்)

சோளப்பயிர்களில் படைப்புழுவின் தாக்கம் தொடர்பில் விவசாயிகள், பொது மக்கள் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி நேற்று உடுவில் பிரதேச சபை முன்றலில் இருந்து மருதனார் மடம் சந்தை வரை முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் சோளப் பயிர்களில் படைப்புழுவின் ஆக்கிரமிப்பானது மிகவும் பாரதூரமான தொன்றாக காணப்படுகின்றது.

இப் படைப்புழுவின் தாக்கம் தற்போது யாழ். மாவட்டத்திலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இப் புழு சோளம், நெல், மரக்கறிப்பயிர்கள் உட்பட 100 இற்கு மேற்பட்ட பயிர்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அபாயத்தை கொண்டுள்ளது. அதனைக் கருத்திற்கொண்டு ஆரம்பத்திலேயே முகாமைத்துவம் செய்வதற்கு அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் விவசாயிகள், பொது மக்கள் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்ப டுத்தும் நோக்கில் குறித்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்களத்தினர், கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9-10-105)

## மைத்திரிக்கு அதிர்ச்சி கொடுக்க தயாராகும் சரத் பொன்சேகா!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

தன்னுடன் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாடு காரணமாகவே தனக்கு அமைச்சு பதவி வழங்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பிற்கமைய அமைச்சர் பதவி பிரதமரினால் பெயரிட்ட பின்னர் ஜனாதிபதியால் அவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகளை அதிகரிப்பதற்காகபுதியயோசனை ஒன்றை எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அதனைச் சமர்ப்பித்த பின்னர் மேலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு நியமிக்கப்பட வேண்டிய அமைச்சர்களில் தனது பெயரும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதற்கமையவும் தன்னை அமைச்சராக நியமிக்கவில்லை என்றால் தான் உச்ச நீதிமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


உடல் பருமனா? Heavy Weight?

இதோ தீர்வு .... SLIM FITNESS

TEASTAR SUPER SLIM தேயிலை வழங்கும்

DOUBLE ACTION

GARCINIA (கார்டினியா) கெண்ட

100% இயற்கையானது

04 வாரங்களில் தீர்வு

கவர்ச்சியான தோற்றம்

மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

இப்போது

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக

கண்காட்சிக் கூடத்தில் (JITF)

ஜனவரி 25, 26, 27ஆம் திகதிகளில்

227 ஆம் இலக்க காட்சிக் கூடத்தில்

04 வாரங்களில் தீர்வு



(7237)


# பாண்ட்யா, ராகுலின் ஏழரை விலகியது

டிவி' நிகழ்ச்சியில் சர்ச்சைக்குரிய முறையில் கருத்து தெரிவித்து சிக்கிய இந்தியாவின் பாண்ட்யா, லோகேஷ் ராகுல் மீதான 'சஸ்பெண்ட்' உத்தரவை பி.சி.சி.ஐ., விலக்கி கொண்டது. சமீபத்தில் இந்திய கிரிக்கெட் வீரர்களான ஹர்திக் பாண்ட்யா, லோகேஷ் ராகுலுக்கு 'டிவி' நிகழ்ச்சி வினையாக அமைந்தது. இதில் பெண்கள், தனிப்பட்ட வாழ்க்கை குறித்து வரைமுறை இல்லாமல் பேசியதால், இவர்களை இந்திய கிரிக்கெட் போர்டு 'சஸ்பெண்ட்' செய்தது.

ஆஸ்திரேலிய ஒரு நாள் தொடரிலிருந்தும் திருப்பி அனுப்பப்பட்டனர். நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியிலும் பங்கேற்க முடியவில்லை. இவர்கள் மீதான தண்டனை குறித்து முடிவு செய்ய, இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ.,) நிர்வாகக்குழு சுப்ரீம் கோர்ட் சென்றது.

நரசிம்மா பொறுப்பேற்பு

ஆனால் கோர்ட்டுக்கும், பி.சி.சி.ஐ.,க்கும் இடையிலான நீதிமன்ற உதவியாளர் கோபால் சுப்ரமணியம் சமீபத்தில் பதவி விலகினார். இவருக்கு மாற்றாக தேர்வு செய்யப்பட்ட நரசிம்மா, பொறுப்பேற்காமல் இருந்ததால் பாண்ட்யா விவகாரத்தில் சிக்கல் நீடித்தது. இதற்கிடையே, நரசிம்மா பொறுப்பேற்றுக்கொண்டதால் முடிவு கிடைத்துள்ளது.



பி.சி.சி.ஐ., வெளியிட்ட அறிக்கையில்,' ஹர்திக் பாண்ட்யா, லோகேஷ் ராகுல் விவகாரம் குறித்து நீதிமன்ற உதவியாளர் நரசிம்மாவிடம் ஆலோசித்தோம். கடந்த 11ம் திகதி இருவருக்கும் விதிக்கப்பட்ட தடை உடனடியாக விலக்கிக்கொள்ளப்படுகிறது' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாண்ட்யா நியூசிலாந்து தொடரில் பங்கேற்க புறப்படுவார் எனத் தெரிகிறது. இதைப்போல ராகுல் உள்ளூர் அல்லது இந்தியா 'ஏ' அணிக்காக விளையாடலாம்.


## சேவை நலன் பாராட்டு



திருமதி சிவகலை பாஸ்கரன்

(கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் இலங்கை வங்கி பருத்தித்துறை.)


சேவைக்காலம் 1993.10.26 - 2019.01.24

வாடிக்கையாளர் பெருமை கொண்ட
இலங்கை வங்கி தனில்...
இருபத்தாறு ஆண்டுகள்
சீர் மிகு சேவைதனை
சிறப்பாக ஆற்றி...
அகவை ஐம்பத்தைந்திலே
விடை பெறும் எம் நாயகியை
மனமார வாழ்த்துகின்றோம்!
வாழி! நீவிர் வாழி!

முகாமையாளரும், ஊழியர்களும்,
இலங்கை வங்கி, பருத்தித்துறை.

(சி-5291)


# சர்ச்சையில் சிக்கிய சர்பராஸ்



இனவெறியை தூண்டும் விதத்தில் பேசிய பாகிஸ்தான் கேப்டன் சர்பராஸ் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகள் மோதிய இரண்டாவது ஒரு நாள் போட்டி டர்பனில் நடந்தது.

இதன் 37வது ஓவரை ஷாகின் வீசினார். இதை எதிர்கொண்ட பெலுக்வாயோ ஒரு ரன்னுக்கு தட்டிவிட்டு ஓடினார். அப்போது, கீப்பிங் செய்து கொண்டிருந்த பாகிஸ்தான் கேப்டன் சர்பராஸ் சர்ச்சைக்குரிய முறையில் பெலுக்வாயோவின் நிறத்தை குறிப்பிட்டு திட்டியது 'ஸ்டம்ப்ஸ் மைக்கில்' பதிவானது. இதில் இனவெறியை தூண்டும் விதத்தில் பெலுக்வாயோவை உருது மொழியில் திட்டியது அம்பலமாகி உள்ளது.

இது குறித்து தெனனாபிரிக்க அணி மானேஜர் முகமது மொசாஜி கூறுகையில், சர்பராசின் செயற்பாட்டை அம்பயர்கள் குறித்து வைத்துள்ளனர். நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்றார்.


## M.சிவகுமாரின் அக்னியின் மாபெரும் இசைமழையில்

இந்திய தொலைக்காட்சி சரிகமப புகழ்
கலைஞர்கள் முதன்முதலாக
கிளிநொச்சி மண்ணில் கலந்து கொள்ளும்
கலைகளின் சங்கமம்
இசை நிகழ்ச்சி






கலைகளின் சங்கமம்
நுழைவுக்கட்டண விபரங்கள்

1000/- 700/- 500/-

பெப்ரவரி
02 | 03
(சனி, ஞாயிறு)

மாபெரும் மலிவு விற்பனை
காலை 11.00 மணி - இரவு 12 மணிவரை

கலை நிகழ்ச்சிகள்
மாலை 03.00 மணி - இரவு 12 மணிவரை

கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம்

நுழைவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் இடங்கள்

01 ரவி லேணர்ஸ் (சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
கிளிநொச்சி: 0777 526658
மல்லாவி: 077 9102 114
ஒட்டுசுட்டான்: 077 356 3530
முள்ளியவளை: 077 1321 885
புதுக்குடியிருப்பு: 077 1623 282

02 சிந்து நகை மாளிகை
கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக

03 யேசுதாசன் மரக்கறி வாணிபம்
கிளிநொச்சி பொதுச் சந்தை
077 8666 737

04 சிற்றி மெடிக்கல்
A9 வீதி, கிளிநொச்சி.
077 627 4719

05 சிவா பதிப்பகம்
டிப்போ சந்தி, கிளிநொச்சி.
077 534 6766

06 ஆதவன் உணவகம்
வாடியடி சந்தி, பூநகரி
077 777 8395

07 நிரோ லேணர்ஸ்
A9 வீதி, பளை
077 0043 948

08 சிந்துஷா ரெக்ஸ்
இரணைமடு சந்தி.

09 செல்வா Hotel & Rest
077 744 2846,
021 492 5665

குறிப்பு: நுழைவுச்சீட்டு பாவிக்கும் நாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(ஒரு நுழைவுச்சீட்டு ஒரு நாளைக்கு மட்டும்)
பெற்றோருடன் வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அனுமதி இலவசம்.

குறிப்பு - மாபெரும் மலிவு விற்பனையில் பங்குபெற விரும்பும் வியாபார ஸ்தாபனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகட்கு: 0767699191, 0762948744, 0774599709
அனைவரும் வருக! ஆதரவு தருக!!

விழா ஏற்பாட்டாளர் : V.S மகேந்திரன்
Founder/ President
Poverty Free Welfare Organization

# மகிந்தவின் மகனுக்குத் திருமணம்; மைத்திரி-ரணில் வாழ்த்து













(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ - டட்யனவும் நேற்றுத் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

குறித்த திருமண நிகழ்வு தங்காலையிலுள்ள வீரகெட்டியவில் இடம்பெற்றது.

இதேவேளை, சிங்கப்பூருக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால, மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்திற்குச் சென்று திருமண பந்தத்தில் இணைய விருந்த தம்பதியினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று திருமண நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## சமகாலத்தில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கருத்துக்களம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் மாதாந்தக் கருத்துக் களம் " சமகாலத்தில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" எனும் தலைப்பில் நாளை மறுதினம் 27 ஆம் திகதீ ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். இந்து சமயப் பேரவையின் பேரவைச் செயலாளர் ஈசான ஸ்ரீ சிவசக்திகிரீவன் தலைமையில் நடைபெறும். (இ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன்,சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ச.செந்தில்குமரன்,கௌரவ விருந்தினர்களாக இ.பேரின்பநாயகம் திருமதி திரௌபதி பாரதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் விமலராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை ரெலிகொம் வணிகப்பிரிவு பதில் முகாமையாளர் ச.நவநீதன் (பழையமாணவர்) கலந்து கொள்வார். (இ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி கே.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கணக்காளர் திருமதி சுதர்ஜினி கலைச்செல்வன். சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ஏ.கிருபாகரன், கௌரவ விருந்தினராக யாழ். இராமநாதன் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திருமதி பாலசௌந்தரிஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(சாவகச்சேரி)

யாழ்.கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி லி.லலிதாவும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் ம.ஸ்ரீதாசனும் கலந்து சிறப்பிப்பர். (இ-30)

## தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் கிழவன் காடு கலாமன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 172 ஆவது இசை ஆராதனை விழா இன்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறும். இந்நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச் சேவை யாழ். கிளையிலிருந்து (வண்ணை சிவன் கோவில் அருகாமை) மாலை4.30 மணியளவில் ஆரம்பமாகும். (இ-5)

## புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித்சிங் சந்து, வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்வர். (இ-5-29)




# நுண்கடன் வழங்கத் தடை

## வேலணை தவிசாளர் தெரிவிப்பு

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மக்களை அசௌகரியத்திற்குள்ளாக்கும் நுண்கடன் திட்டம், லீசிங் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடந்த 20 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

தமது பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இம்மக்களுக்கு குறித்த நிறுவனங்கள் ஆசைவார்த்தை கூறி மோசம் செய்ய நினைப்பதாகத் தெரிவித்தார்.


கடந்த காலங்களில் நுண்கடன்களைப் பெற்ற பெண்களைக் குறித்த தவணையில் பணத்தைக்கட்டாத நிலையில் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முயற்சித்ததாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று லீசிங் நிறுவனங்களும் பல்வேறு சலுகைகளை வழங்குவதாகக் கூறி இளைஞர்களைத் தவறான நடத்தைகளுக்கு உள்ளாக்குவதன் காரணமாக தமது பிரதேசஎல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் குறித்த நிறுவனங்கள் தமது நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தடை விதித்ததாகவும் இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

# 'சேனா' வழியில் நாவல் புழு

(கொழும்பு)

சேனா என்றழைக்கப்படும்படைப்புழுவைப்போன்று, நெல் மற்றும் சோளப் பயிர்களை நாசப்படுத்தும் இன்னொரு வகை படைப்புழுவினமொன்று திம்புலாகல - மனம்பிட்டிய பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



நாவல் நிறத்தையுடைய இந்தப் புழுவின் உடலின் சில இடங்களில், செம்மஞ்சள் நிறமும் கலந்திருப்பதாகவும் இவை, நாற்று இலைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக அப்பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவை, நெற்கதிர்கள் மாத்திரமன்றி, நாற்று இலைகளையும் உணவாக உட்கொண்டிருப்பதுடன் சேனா படைப்புழுவைப் போன்று பரவிக் கிடப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)


# மரண அறிவித்தல்



(சி-5287)

## சிற்றம்பலம் இராசநாயகம்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்-கட்டட திணைக்களம், முன்னாள் தலைவர்- உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கருணையம்பதி சனசமூக நிலையம்)**

கருணையம்பதி, கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் இராசநாயகம் 23.01.2019 புதன்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம்- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா- இராசம்மாவின் பாசமிகு மருமகனும் பத்மாவதியின் ஆருயிர் கணவனும் பிரதீப் (தீஸ்), ரமணேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நித்தியா, பானு ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரநீஸ், ரேஜான் ஆகியோரின் அன்பு பேரனும், இராசேந்திரம், இராசேஸ்வரி, சந்திரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மராசா, தேவராசா, லங்காதேவி, இராமையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜிதர், பிரவீனா, சாந்தன், சாந்தி ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும், பிரபாகரன், பிரபாவதி ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.01.2019 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தொடர்பு:**
**021 205 6909**
**071 558 4004 -பிரதீப் (தீஸ்)**

**தகவல்:மகன்கள்**
**இ.பிரதீப் (தீஸ்) (உத்தியோகத்தர்-ஸ்ரீலங்கா ரெலிகொம்)**
**இ.ரமணேஸ் (உத்தியோகத்தர்-R.R.DONNELLY)**


# இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** மற்றவர்களின் மணநிலையை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான நாள்.

**இடபம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், திடீர் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| சூரி.புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி | | |
| சனி | குரு.சுக் | | சந் |

**25.01.2019**

தை 11, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 12.42 மணிவரை

உத்தரம் முன்னிரவு 10.28 மணிவரை

சுபநேரம் 6.36-8.06 மணிவரை

இராகுகாலம் 11.06-12.36 மணிவரை

**வளவன்**

**கடகம்:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய கற்பனைக்களை வளர்த்துக் கொள்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**சிம்மம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் கைகூடும், குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**கன்னி:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.



போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் கல்லூரி அரங்கத்தில் அதிபர் கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஜெயதிலக பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். (படங்கள்:-மகாலிங்கம்)

## வருமானம் கிடைத்தும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு நட்டம்!

(கொழும்பு)

சிறந்த சேவை முன்னெடுக்கப்பட்டு வருமானம் கிடைத்த போதும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் நட்டத்தை எதிர் நோக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாணய மதிப்பிறக்கம் மற்றும் எரிபொருள் விலையேற்றம் என்பனவே இவற்றுக்கான காரணங்கள் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் நிறுவனம் 66 பில்லியன் ரூபாய் நட்டத்தை எதிர் நோக்கியிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டில் அந்த நட்டம் 40 பில்லியன் ரூபாயாக இருந்தது.

இந் நிலையில் நிறுவனத்தின் தேறிய வருமானம் 120 பில்லியன் ரூபா வரை அதிகரித்திருந்தது.

இது கடந்த வருடத்தை காட்டிலும் 8 வீத வளர்ச்சியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
078 815 5503/ 071 117 2441
(7258)

### மணமகள் தேவை

அரச உத்தியோகம்
நட்சத்திரம்-அத்தம்
கிரக பாவம் 30, பிறப்பு 1978
T.P:-077 215 6882

### காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி ரயில் கடவையிலிருந்து 200m தூரத்தில் 3 பரப்பு 4.25 குளி காணியும் பழைய வீடும் கிணறும் விற்பனைக்கு.
(7033) தொடர்புக்கு :- 077 990 5304

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா: 25<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்:BA,கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/9151 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 7 1/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:அரசபணி,சைவபோசனம்<br>தொ.இ: G/1990 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 2<br>கி.பா: 9 1/4<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:B.Sc, Project Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,Doctor, Engineer, Accountant,IT, Food &Nutrition,Bank<br>தொ.இ: B/9152 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 1<br>கி.பா:124 3/4செவ் 1 இல்<br>உயரம்: 151cm<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி, நிகழ்ச்சி திட்ட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/2006 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 1<br>கி.பா: 97 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Sc,Civil Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,Doctor, Engineer, Accountant,IT, Food&Nutrition,Bank<br>தொ.இ: B/9153 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 4<br>கி.பா: 37 1/2செவ் 2 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி, நிகழ்ச்சி திட்டஉதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/2037 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:53செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L , Cable TV<br>தொ.இ: B/9155 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 1<br>கி.பா: 31 1/2<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி, அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/2038 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

எங்கள் காலத்தில் வாழ்ந்து நாங்கள் தரிசித்த மூக்குப் பொடிச் சித்தர் சமாதி அடைந்து நாற்பத்தெட்டாவது நாளில் அவரை நினைந்து வழிபடுவதில் பெருமை அடைகிறோம்.

## உலக சைவத் தமிழர்களின் புனித பூமி திருவண்ணாமலை




அனைத்து இந்துமத பீடங்கள் அமைந்த கிரிவலப் பாதையில் இலங்கை மக்களின் பங்களிப்புடன் ஒரு பீட அமைவிடம் இல்லாத குறையை நிறைவு செய்ய எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

சைவப்பிரகாசப் பேரவை
யாழ்ப்பாணம்.
077 390 1877, 077 378 3316
(C-5249)

### வவுனியா பழைய பேருந்து நிலையத்தில்

# நின்ற இரு சிறுவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நேற்று காலை முதல் மாலை வரை 7 வயது மற்றும் 9 வயதுகளைக் கொண்ட இரு சிறுவர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் தந்தை என்று சொல்லப்படும் ஒருவருடன் நீண்ட நேரமாக பேருந்து நிலையத்தில் நின்றிருந்ததை அவதானித்துள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள் பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

அவ்விடத்திற்கு மாலை விரைந்த பொலிஸார் இரு சிறுவர்களையும் சிறுவர்களின் தந்தை என்று நம்பப்படும் மதுபோதையிலிருந்த நபர் ஒருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் 7 வயது மற்றும் 9வயது மதிக்கத்தக்க பெண் ஆண் என இரு சிறுவர்கள் தமது தந்தை என்று சொல்லிக்கொண்ட நபர் ஒருவருடன் நீண்ட நேரமாக பேருந்து நிலையத்தில் நின்றிருந்ததை அவதானித்துள்ள வர்த்தகர்கள் சிலர் அவர்களின் நடவடிக்கையில் சற்று சந்தேகம் ஏற்பட்டுள்ளதையடுத்து நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் வவுனியா பொலிஸாருக்கு இத்தகவலை வழங்கியுள்ளனர்.

சிறுவர் பிரிவு பொலிஸார் பேருந்து நிலை யத்தில் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்ததுடன் தந்தை என்று அழைக்கப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது அவர் மது போதையிலிருப்பது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து இரு சிறுவர்களையும் மதுபோதையில் காணப்பட்ட தந்தை என்று சிறுவர்களினால் அழைக்கப்பட்ட நபரையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுள்ள சம்பவம்இடம்பெற்றுள்ளது.(2-281)




### தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தையொட்டி

# பூநகரி நகர் பகுதிகள், கிராமங்களில் பிரசாரம், துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்





(பூநகரி)

தேசிய போதைப் பொருள் தடுப்பு வாரத்தையொட்டி பூநகரி பொலிஸ் பிரிவினர், பூநகரி பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளிலும் பூநகரி நகர்ப்பகுதிகளிலும் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை கிராமங்கள் தோறும் தொண்டர் அமைப்பின் உதவியோடு துண்டுப் பிரசாரங்களை நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகித்து வருகின்றனர்.

ஒருவாரத்திற்கு இந் நடவடிக்கைகள் தொடரும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந் நடவடிக்கையின் போது பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார, பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஐயம்பிள்ளை ஆகிய இருவரினதும் தலைமையில் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-84)

# பயிர்ச்செய்கை மேற்கொள்ளவில்லை; மானிய உரம் முறைகேடாகப் பெறல்

## விசாரணை முன்னெடுக்கப்படும் என்கிறார் கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்

(கண்டாவளை)

கிளிநொச்சி நாகேந்திரபுரம் பகுதியில் கடந்த ஆண்டு முதல் கடமையாற்றிய கிராம அலுவலர் எந்தவித பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளாது விவசாயிகளுக்கு வழங்குகின்ற மானிய உரத்திற்கான கொடுப்பனவை முறைகேடாகப்பெற்றுக்கொண்டார் என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாகேந்திரபுரம் கிராமத்தில் பணியாற்றிய கிராம அலுவலர் நாகேந்திரபுரம் கிராமத்தில் எந்தவிதமான நெற்செய்கையினையும் மேற்கொள்ளாது தன்னுடைய பெயரையும் தனது கணவர் மற்றும் உறவினர் ஒருவரின் பெயரினையும் பதிவிற்கு உட்படுத்தி அதனூடாக கடந்த 2017ஆம் ஆண்டில் தலா ஐந்து ஏக்கரிற்கான மானிய உரத்திற்கான கொடுப்பனவை பெற்றுக்கொண்டுள்ளார் என்று பிரதேச விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதேவேளை இந்தப்பிரதேசத்தில் இருக்கின்ற பலர் விவசாயம் மேற்கொண்டும் மானிய உரத்திற்கான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பினுடைய தலைவர் கோபாலப்பிள்ளை உதயகுமாரைத் தொடர்பு கொண்டு வினவியபோது. மேற்படி கிராமஅலுவலர் நாகேந்திரபுரம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட பிரதேசத்தில் எந்த விதமான பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால், கிராம அலுவலர் அந்தப்பிரதேசத்தில் வசிக்காத மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளாத மேலும் இரண்டு பேருடைய பெயர் விபரங்களை பதிவிற்குட்படுத்தி தலா ஐந்து ஏக்கருக்கு மானிய உரத்திற்கான கொடுப்பனவை பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பில் கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது.

குறித்த சம்பவம் தொடர்பில் எழுத்து மூலமான முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை.

குறித்த மோசடி குற்றச்சாட்டுத் தொடர்பில் கமக்கார அமைப்பினர் முழுமையான பொறுப்பைக் கூற வேண்டும்.

இது தொடர்பில் விசாரணைகளையும் முன்னெடுப்பதாகவும் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (2-315)



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அனைத்து பல் கலைக்கழக மாணவர்கள் குறித்த பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 60 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கி வைத்தனர். பாடசாலை அதிபர் பேரம்பலம் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அனைத்து பல்கலைக்கழகங்களிலிருந்தும் மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

# ஒலுமடு தமிழ் ம.வித்தியில் பேரணியும் போதைப்பொருள் தடுப்பு கருத்தமர்வும்



(ஒலுமடு)

போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வாரத்தை முன்னிட்டு ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக கண்டன பேரணி இடம் பெற்றுள்ளது.

ஒலுமடு தமிழ் மகா வித்தியாலய அதிபர் கு.விமலேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு தினத்தின் மூன்றாம் நாள் நிகழ்வான நேற்று முன்தினம் ஒலுமடு தமிழ்மகா வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள்,பொலிஸார் ஆகியோர் இணைந்து பேரணியில் கலந்து கொண்டதுடன் பொதுக் கூட்டமும் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது போதைப் பொருள் பாவனை தொடர்பான பாதிப்புக்களும் அதனால் இடம்பெறும் விளைவுகள் தொடர்பான கருத்தரங்கும் விழிப்புணர்வும் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## "இலங்கையை பூங்காவாக மாற்றுவோம்" 30 குடும்பங்களுக்கு மாமரக்கன்றுகள்



(கிளிநொச்சி)

"இலங்கையை பூங்காவாக மாற்றுவோம்" எனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு உயிரோட்டம் வழங்கும் முகமாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட மருதநகர் கிராம பகுதியில் 30 குடும் பங்களுக்கு மாமரக் கன்றுகள் முன்னாள் பிரதி விவசாய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன்,கிளிநொச்சி மாவ ட்ட இணைப்பாளர் பழனியாண்டி நந்தகுமாரினால் தைப்பூச தினத்தில் வழங்கப்பட்டது. (2)



மடு பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் மடு பிரதேச செயலகத்தில் வைத்து முற்பகல் 10 மணியளவில் வாழ்வாதார உதவிகளை வழங்கியதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# "யூரியா" உரத்திற்கு திடீர் தட்டுப்பாடு! வர்த்தகர்கள் மீது விவசாயிகள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாயச் செய்கைக்கு பயன்படுத்தும் உரவகையான "யூரியா" உரத்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது உருளைக்கிழங்கு, கோவா, புகையிலை போன்ற செய்கை நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுவரும் நிலையில் உரங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் உரங்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு தரமறுப்பதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் தலையீடு செய்து தடையின்றி உரம் கிடைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

# "மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு போதையை ஒழிப்போம் என போராட்டம்"

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் விசனம்

(யாழ்ப்பாணம்)

மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்கிவிட்டு போதையை ஒழிப்போம் என மாணவர்களை வீதியில் போராடச் சொல்கின்றார்கள் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நாமகள் வித்தியாலயமும் நல்லூர் பிரதேச சபையும் இணைந்து நேற்று நடத்திய போதை ஒழிப்புப் பேரணியில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 14 கோடி லீற்றர் மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகவும் 15 வயதிற்குட்பட்டவர்களில் 15 பேரில் ஒருவர் மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்களே போதைப் பொருள் பாவனை அதிகரிக்க ஏதுவாகச் செய்யப்படுவதாகவும் குறிப்பாக ஆர்ப்பாட்டங்கள், தேர்தல் பரப்புரைகளில் அதிகளவிலான மதுபானம் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியால் ஒழுங்குபடுத்தப்படும் போதை ஒழிப்பு நடவடிக்கையில் அரசியல்வாதிகளுக்கு முதலில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படும்

## கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை

(கரவெட்டி)

நெல்லியடி சந்திக்கு அருகில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வாகனச் சுத்திகரிப்பு நிலையத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தொடரவுள்ளதாக கரவெட்டி பிரதேசசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி கிழக்குக் கொடிகாமம் வீதியில் நெல்லியடி சந்திக்கு அருகில் ஒரு வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. குடிமனைகள் அதிகம் உள்ள பகுதியில் குறித்த வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கும் நிலை ஏற்படவுள்ளதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்படும் எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் பொதுமக்களால் முறையிடப்பட்டுள்ள நிலையில் கடந்த வாரம் குறித்த வாகன சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்து வைத்துள்ளனர். பொதுமக்களின் எதிர்ப்பு தொடர்ந்து வரும் நிலையில் இந்த வாகன சுத்திகரிப்பு நிலையத்தை இயக்குவதற்குப் படிப்படியாக நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் இதை உடனடியாகத் தடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்துப் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கான கட்டடம் எமது அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விடயம் பிரதேசசபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு, தற்காலிகமாக அப்பணிகளை நிறுத்துமாறு 3 முறை அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். நேரடியாகச் சென்றும் அதை நிறுத்துமாறு தெரிவித்தோம்.

ஆனால் அவர்கள் அதையும் மீறி கடந்த வாரம் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். உரிய கட்டட அமைப்பு இன்றி இந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு பொதுமக்கள் பாரிய எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்ற நிலையில் நாம் குறித்த நிலையத்தினருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம்.

சட்ட நடவடிக்கையின் மூலமே இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆண், பெண் சமத்துவம் குறித்து கருத்தரங்கு





(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், ஆண், பெண் சமத்துவம் தொடர்பான கரத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மருதனார்மடம் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இன்பம் தலைமையில் நெப்சோ அமைப்பின் பி.எம்.சட்ட திட்டத்தின் கீழ் இடம்பெற்ற இந்த கருத்தரங்கில் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள், அரசியலில் அவர்களின் ஈடுபாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதில் வளவாளராக பெண்உரிமை செயற்பாட்டாளர் திருமதி ரஜனி, பிரதம விருந்தினாக நெப்சோ அமைப்பின் பி.எம்.சட்டதிட்ட இணைப்பாளர் பிரியங்கர கோஷ்த்தா கலந்து கொண்டனர். (இ-9)

# குறை'களை' பதிகம் 12



## யாழ். வேம்படி வீதியை ஒருவழிப் பாதையாக்குக

*யார் பொறுப்பு என்றறியா*
*யாப்பு மட்டும் இங்கே இருக்கு*
*ஏன்? என்று கேட்டுவிட்டால்*
*எரிந்து விழுவதைத் தவிர வேறில்லை*
*காரியம் ஒன்றும் ஆகவில்லை*
*கௌரவத்து ஆளுநரே!*
*ஒருக்கால் வந்து ஒன்றரை மணிக்கு*
*வேம்படி மகளிர் கல்லூரி*
*வீதியைப் பாருங்கள்*
*அங்குமிங்குமென வருகின்ற வாகனம்*
*பன்னிரெண்டு அடிப்பாதையால்*
*படையெடுக்கும் மாணவிகள்*

*கார் ஒருபுறம்; கனத்த பஸ் மறுபுறம்*
*மோட்டார் சைக்கிள்கள்*
*முட்டி மோதித்தள்ளும் ஆட்டோக்கள்*
*ஐயகோ! 1995 இல் செம்மணி கடந்த*
*ஞாபகம்தான் வந்து போகும்*
*ஏன்தான் இப்படி*
*நேற்றும் ஓர் அன்பர் தன் காரை*
*கல்லூரி வாசலில் நிறுத்திவிட*
*மாணவியரும் பெற்றோரும்*
*வாகனத்துச் சாரதிகளும்*
*பட்டபாடு போதுமென்றாயிற்று*
*ஐயனே! காலை ஒரு மணித்தியாலம்*
*பிற்பகல் வேளை ஒரு மணித்தியாலம்*
*என்று நேரம் இட்டு வேம்படி மகளிர் கல்லூரி வீதியை*
*ஒருவழிப்பாதையென அறிவித்தால் எல்லாம் சரி வரும்*

*கொழும்பு மாநகரில் இவ்வாறு விதிமுறைகள்*
*பின்பற்றும் நடைமுறைகள் இருப்பதனால்*
*அதன் வழி நாமும் பகுதி நேரமாய்*
*ஒரு வழிப்பயணத்தை பக்குவமாய் அமுல்படுத்த*
*நெருக்கடிகள் குறைந்து*
*மாணவிகள் நிம்மதியாய் வந்து போகமுடியும்*
*இக்குறை களைய இனியன செய்வீர்*
*என்றசையா நம்பிக்கையுடன்*
*குறை களை பதிகம் பாடினோம்*

*-கூத்தனார்-*

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 150 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 | 300 |
| தக்காளி | 80 | 90 | 100 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 80 | 70 | 80 | 60 | 80 |
| கரட் | 80 | 120 | 100 | 100 | 120 |
| பூசணி | 50 | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 100 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 160 | 100 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 140 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 50 | 30 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 80 | 140 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 90 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 60 | 100 |
| கறிமிளகாய் | 150 | 100 | 140 | 90 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 800 | 500 | 500 |
| போஞ்சி | 50 | 80 | 100 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | – | 150 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 90 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 140 | 140 | 160 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 100 | 80 | 120 |
| முள்ளங்கி | 30 | 80 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 70 | 50 | 110 | 60 |

# நீராவியடி பிள்ளையார் ஆலய வளாக

# புத்தர் சிலை வழக்கு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

## இரு தரப்பினர்களும் குறித்த பகுதியில் அபிவிருத்தி வேலைகளை செய்யக்கூடாதென உத்தரவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நாயாறு நீராவிப்பிள்ளையார் ஆலய வளாக புத்தர் சிலை வழக்கு விசாரணை பெப்ரவரி மாதம் பன்னிரண்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - நாயாறு நீராவிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்தர்சிலை அமைக்கப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி லெனின் குமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற விருந்தது. எனினும் அவசர நிலையொன்றினை உணர்ந்து ஆலய நிர்வாகத்தினர் மற்றும் தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வி.நவநீதன் ஆகியோர் நகர்த்தல் பத்திரம் ஒன்றின் மூலம் அது தொடர்பான வழக்கை நேற்று நடத்துமாறு கோரியிருந்தனர்.

வழக்கு விசாரணைகளில், குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டது சட்டவிரோதமானது என்று தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிராம மக்களின் சார்பில் முன்னிலையானவர்களால் தெரிவிக்கப்பட்டது. முரண்பட்ட பௌத்த துறவியை எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தினரின் ஆதரவுடன் சட்டவிரோதமான வகையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை நேற்று முன்தினம் திறக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் குறித்த பிணக்கு தொடர்பில் இரு தரப்பினரும் நீதிமன்றில் முன்னிலையானதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணைகளின் முடிவில், முதலாம் தரப்பான பௌத்த பிக்கு சார்பானவர்களிடம் ஊடகவியலாளர்கள் நேற்றைய வழக்கு விசாரணைகள் குறித்து வினவிய போது, அவர்கள் கருத்துத் தெரிவிக்க மறுத்ததுடன், இரண்டாம் தரப்பான நீராவிப் பிள்ளையார் கோவில் சார் பாக வாதாடிய 13 சட்டத்தரணிகளிடம் இது குறித்து கேட்குமாறும் கூறியிருந்தனர்.

அந்தவகையில் இரண்டாம் தரப்பான நீராவிப் பிள்ளையார் ஆலயம் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளுள் ஒருவரான அன்ரன் புனிதநாயகம் இன்றைய நாள் வழக்கு விசாரணைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது,

குறித்த வழக்கில் இரு பகுதிகள் சார்பிலும் சமர்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதலாம் தரப்பான பௌத்த பிக்குவின் சார்பில் இன்றைய தினம் வர்த்தமானி அறிவித் தல் ஒன்றில் தொல்பொருட் திணைக்களம் அந்தக் குறித்த இடத்தினை தொல்பொருள் திணைக்களத்திற்குரிய பிரதேசமாக அறிவித்ததாக ஒரு ஆவணத்தினையும் குறித்த இடத்திலே கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி தந்ததான ஒரு அவணத்தினையும் சமர்ப்பித்தார்கள்.

அந்த வர்த்தமானிப் பத்திரிக்கையிலே குறித்த இடத்தின் பெயர் செட்டிமலை எனவும், செட்டிமலைக் கிராமம், செட்டிமலை கிராம சேவகர் பிரிவெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


அதற்கு இரண்டாம் தரப்பான பிள்ளையார் கோவில் சார்பாக வாதாடிய எம்மால் அவ்வாறானதொரு இடம் இல்லை எனவும் மேலும் தொல்பொருள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்திலே எந்தப் பிரதேசம், எந்த இடம், எவ்வளவு விஸ்தீரணம் என்பன இல்லை எனவும், எனவே இதற்கு நாங்கள் கடுமையான ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் கூறினோம்.

இதனையடுத்து முதலாம் தரப்பினர் இவ்விடயத்தை சுமுகமாக தீர்ப்பதற்கு சாத்தியக்கூறு இருப்பதாகவும், சுமுகமாக தீர்க்க விரும்புவதாகவும் கூறியதன் அடிப்படையில் நீதிமன்றானது தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை அடுத்த தவணை மன்றிலே ஆஜராகுமாறும் வருகின்ற பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வரையில் அந்தக் குறித்த பிரதேசத் திலே முதலாம் பகுதியினரோ, அல்லது இரண்டாம் பகுதியினரோ எந்த விதமான அபிவிருத்தி வேலைகளோ செய்யக் கூடாதெனவும் உத்தரவிட்டுள் ளது.

குறித்த பிணக்குக்குரிய இடத்திலுள்ள ஆலயம் மற்றும் விகாரை தொடர்பாக ஒரு சமாதானமான தீர்வு எட்டமுடியுமா? என ஆராய்வதற்கும் தேவை ஏற்படின் இரண்டாம் தரப்பான நீராவிப் பிள்ளையார் கோவில் சார்பாக தெரியப்பட்டவர்களின் காரணாங்களை முன்வைப்பதற்கும் நீதிமன்று தவணை வழங்கியுள்ளது என்றார். (2-281)

## அல்- இக்பால் மகா வித்தியாலயத்தில் போதைப் பொருள் ஒழிப்பு வாரம் கடைப்பிடிப்பு





(குருமன்காடு)

நாடாளாவிய ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்பின் பேரில் போதைப்பொருள் ஒழிப்பு விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பாடசாலை மட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை போதைப் பொருள் ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில், வவுனியா அல்- இக்பால் மகாவித்தியாலயத்தில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை வாரம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் ஏ.அப்துல் நசார் மற்றும் பிரதி அதிபர் எம்.எஸ்.எம்.றாசிக் ஆகியோரின் தலைமையில் இந் நடவடிக்கை இடம்பெற்றது.

அதனடிப்படையில் இராணுவத்தினர், பொலிசார், ஆகியோரின் துணையுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு இவ் விழிப்புணர்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. (2-250)

## பூநகரி நல்லூர் ம.வித்தியாலயத்திலும் சாமிப்புலம் அ.த.க. பாடசாலையிலும் இல்லமெய்வல்லுநர் திறனாய்வு இன்று

(பூநகரி)

கிளிநொச்சி நல்லூர் மகாவித்தியாலயமும் கிளி பூநகரி நல்லூர் மகாவித்தியாலயமும் கிளி/ சாமிப் புலம் அ.த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்லமெய்வல்லுநர் திறனாய்வு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு பாடசாலை அதிபர்களான திருமதி.கு. இராசேந்திரம், செ. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ. ஐயம்பிள்ளை ; சிறப்பு விருந்தினர்களாக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. உதயணன் கிளிநொச்சி வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் கிராம அலுவலர் பு. மோகன் ராஜ் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.இ. சந்தான லக்சுமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)

## மோ.சைக்கிளுக்கு தீயிட்ட நபர் பொலிஸாரால் கைது

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் கடை ஒன்றின் பின்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்திய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்

மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பின்னால் தனது மோட்டார் சைக்கிள் ஒன்றை அதன் உரிமையாளர் நிறுத்தி விட்டு வீட்டுக்கு சென்ற சமயம் மற்றொரு மோட்டார் சைக்கிளில் மது போதையில் வந்த நபர் ஒருவர் குறித்த சைக்கிளை தீயிட்டுக் கொளுத்தியுள்ளார்.

நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென் தீப்பற்றி எரிவது தொடர்பில் அவதானித்த அதன் உரிமையாளர் சம்பவ இடத்துக்கு ஓடிச் சென்ற போது அந்த இடத்திலிருந்து பிரஸ்தாப நபர் தீயை வைத்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற போது அவரை பின் தொடர்ந்து துரத்திய போது அருகிலுள்ள வீட்டுடன் கூடிய மற்றுமொரு வர்த் தக நிலைய வளாகத்துக்குள் நுழைந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் உரிமையாளர் மல்லாவி பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் அதிகாலை தனது முறைப்பாட்டை பதிவு செய்திருந்த சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டதுடன் அன்றைய தினம் பிற்பகல் மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்திய சந்தேகத்தின்பேரில் ஒருவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் குறித்த விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் மேற்படி நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளனர். (2-315)

## பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி பூநகரி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் " பூங்கதிர் " 6 ஆவது சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் அ. ஐயம்பிள்ளை தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந. பிரபாகரன் கலந்து கொள்ள வுள்ளார் என பூநகரி பொது நூலக வாசகர் வட்டம் அறிவித் துள்ளது.

எனவே சகல உறுப்பினர்களையும் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்ப்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-84)

## முதியோர்கள் திருத்தலங்களுக்கு சுற்றுலா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் பொன்னகர் கிராமத்தைச் சேர்ந்த முதியோர்களின் ஒரு தொகுதியினர் இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

முதியோர் உளசமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட சமூக சேவைகள், அலுவலகத்தால் இந்தப் பயண ஏற்பாடு செய்து கொடுக்கப் பட்டுள்ளது.

இதன்போது கன்னியா வெந்நீருற்று , சிறிலட்சுமி நாராயணன் கோவில், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

சென்ற வருடமும் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் 14 ஆன்மீகச் சுற்றுலாப் பயணங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## பொங்கல், கால்கோள் விழா



(பூநகரி)

பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் பொங்கல் தின விழாவும் தரம்- 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவும் பாடசாலை அதிபர் ச. ரதீஸ்குமார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கிளிநொச்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பிரேமா மதுர நாயகம், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன் , சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர். புதிதாக தரம் ஒன்றில் இணையும் சுமார் 30 இற்கு மேற்பட்ட சிறார்கள் அவ்வூர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மாலை சூட்டி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். இந் நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (2-84)

# கம்பனிகளின் வினைத்திறனற்ற செயற்பாடே சம்பளப் பிரச்சினைக்குக் காரணம் -அநுர



(கொழும்பு)

பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகளின் வினைத்திறனற்ற செயற்பாடே சம்பள பிரச்சினைக்கு காரணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கம்பனிகள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சம்பள பிரச்சினை தொடர்பாக நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே அநுர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப் பட்டால் கம்பனிகளை நடத்த முடியாதென குறிப்பிடுகின்றனர்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. தோட்டத் தொழிலாளர்கள் கொழுந்து பறிக்காவிட்டால் அந்த கம்பனிகளில் எதுவும் நடக்காது. அவர்களது உழைப்பை பயன்படுத்தாவிட்டால் இந்த தொழிற்துறையில் எந்த நன்மையும் இருக்காது. உற்பத்தியின் ஆணிவேராக இருப்பது அவர்களின் உழைப்பு. அதற்கு நியாயமான ஊதியம் இல்லை.

பெருந்தோட்ட கம்பனிகள் 22இல் 15 கம்பனிகள் மாத்திரமே ஓரளவு சம்பளத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளன. 6 கம்பனிகள் முற்று முழுதாக நிராகரித்துள்ளன.

1992இல் இந்த 22 கம்பனிகளும் தோட்டத் தொழிற்துறையை பொறுப்பேற்ற போது தேயிலை தோட்டங்கள் சிறந்த நிலையில் காணப்பட்டன. செழிப்பின் விளிம்பில் இருந்தன. இன்று அது இல்லாமல் போயுள்ளது. அதற்கு தொழிலாளர்களா காரணம்? கம்பனிகளே காரணம்.

அப்போது மலையகத்தில் 400 தொழிற்சாலைகள் இருந்தன. இப்போது 200 மாத்திரமே உள்ளன. உரிய பராமரிப்பு மேற்கொள்ளப்படுவதில்லை.

மக்களின் உழைப்பு மற்றும் தோட்டங்களின் செழிப்பை கம்பனிகள் உறிஞ்சிக் குடித்துள்ளன.

பெருந்தோட்டத் தொழிலின் இலாப நட்டங்களை கம்பனிகளே தீர்மானிக்கின்றன. உலக சந்தையின் விலையும் அதனை தீர்மானிக்கிறது. மாறாக இலாப நட்டங்களை தொழிலாளர்கள் தீர்மானிப்பதில்லை. கம்பனிகளின் வினைத்திறனற்ற செயற்பாடே பிரச்சினைகளுக்கு காரணம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிக வருமானம் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம்கூட இல்லை. அதனால் இவர்களுடைய சம்பளத்தை அதிகரிப்பது அவசியம்.

மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வாக்குகளில் எந்த வித்தியாசமும் இல்லை. கொழும்பில் ஒன்று, இரண்டு என்றுதான் வாக்குகளை எண்ணுகின்றீர்கள். மலையக மக்களின் வாக்குகளையும் ஒன்று, இரண்டு என்று தான் எண்ணுகின்றீர்கள். அவர்களுடைய வாக்குகளை தசம் ஒன்று, தசம் இரண்டு என்றா எண்ணுகிறீர்கள்? இல்லையே? ஆனால் அவர்களுடைய சலுகைகளில் மாத்திரம் பாரபட்சம் ஏன்? அரசாங்கம் மலையக மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு அவர்களை பாதுகாக்கும் பொறுப்பை மாத்திரம் கம்பனிகளுக்கு கொடுத்துள்ளது. இது எந்த ரீதியில் நியாயம்?

முதலாளிமாரின் மனக் குறைகளையும் பிரச்சினைகளையும் கேட்டுக்கொண்டு வருவதற்கு தொழிற்சங்கங்கள் இல்லை. மக்களின் குறைகளை தீர்ப்பதே தொழிற்சங்கங்களின் வேலை.

கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு என அம்மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

தோட்டத் தொழிற்றுறையால் நட்டம் என்று கூறும் கம்பனிகள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றன. ஆனால், மக்களின் பிரச்சினை தீர்க்கப் படவில்லை. ஆகவே அவர்களின் போராட்டம் நியாயமானது.'

ஏற்கனவே 18 மாதங்கள் நிலுவைச் சம்பளம் வழங்காமல் கம்பனிகள் உள்ளன. சம்பளப் பிரச்சினையை தீர்மானிக்கும் கலந்துரையாடலும் 5 மாதங்களாக இழுத்தடிக்கப்படுகின்றன. இப்போதும் அம்மக்களின் நிலுவைச் சம்பளத்தை கொடுக்காமல் இருக்கவே கம்பனிகள் முயற்சிக்கின்றன.

இரண்டரை நூற்றாண்டாக அநீதி இழைக்கப்படும் இந்த மக்களுக்கு இனியாவது நீதியை பெற்றுக்கொடுங்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதர்மண்டிக் காணப்படும் காணிகளை தூய்மையாக்க நடவடிக்கை வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் அனுஷியா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் காணப்படும் தனியாருக்கு சொந்தமான காணிகள் பல புதர் மண்டிக் காணப்படுவதால் நோய்ப் பரவல் மற்றும் சமூக சீர்கேடுகள் ஏற்படுவதற்கான ஏது நிலை காணப்படுகின்றது.

இந்த அவல நிலையிலிருந்து எமது பிரதேசத்தை பாதுக்காக்க வேண்டியது எமது சபையின் கடமையாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி ஜெயகாந்த் அனுஷியா வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு நேற்று தவிசாளர் கருணாகர குருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட எல்லைக்குள் தனியாருக்கு சொந்தமான காணிகள் பல புதர் மண்டிக் காணப்படுகின்றன.

இவற்றை பிரதேச சபை இனங்கண்டு அவற்றை சபையின் பொறுப்பிலெடுத்து துப்புரவாக்கி குறித்த காணிகளை சபையின் ஆளுகைக்குள் கொண்டுவருவதுடன் அக்காணிகளுள் குறிப்பிட்ட ஒரு கால எல்லையை நிர்ணயித்து உரிமையாளர்கள் வந்து பொறுப்பெடுக்குமாறு எச்சரிக்கை பதாகை போடுவதுடன் அவ்வாறு உரிமையாளர்கள் உரிமை கோரி வருமிடத்து அதற்கான பராமரிப்பு செலவு மற்றும் ஒரு தொகை தண்டம் அறவிடுவதன் மூலம் டெங்கு நோயின் தாக்கத்தையும் அதன் பெருக்கத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்பதுடன் சமூகச் சீர்கேடுகளையும் தடுப்பதனுடன் எமது பிரதேசத்தை தூய்மையாக்க முடியும்.

அந்தவகையில் எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் உள்ள புதர் மண்டிக் காணப்படும் காணிகளை சபை இனங்கண்டு அவற்றை துரித கதியில் மேற்குறித்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இச்சபையில் ஒரு பிரேரணையாக முன்வைக்கின்றேன் என்றார்.

குறித்த பிரேரணை கடுமையான வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# படைப்புழு தாக்கத்துக்கு இறக்குமதி காரணமல்ல

(கொழும்பு)

உள்நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் படைப்புழு பரவுவதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சோள விதைகள் காரணமல்ல என விவசாயப் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. எம். டபிள்யூ வீரகோன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து சோள விதைகள் இறக்குமதி செய்யப்படும்போது அவை முழுமையான ஆய்வுகளின் பின்னரே இறக்குமதி செய்யப்பட்டு விவசாயிகளிடம் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

எனவே படைப்புழு தொற்றுக்கு இறக்குமதியான சோள விதைகள் காரணமல்ல. தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்றூடாகவே இப்புழுக்கள் நாட்டுக்குள் பரவியிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

படைப்புழு 80 வகையான பயிர்களை சேதப்படுத்தியுள்ளது.



அமெரிக்கா, ஆபிரிக்கா, பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகள் படைப்புழுவால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளன. எனினும் எந்தவொரு நாடும் இதுவரை இப்படைப்புழுவை முற்றாக அழிப்பதில் வெற்றி காணவில்லை.

இப்புழுவை அழிப்பதற்காக இதுவரையில் 05 வகையான கிருமி நாசினிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் சோளக்கதிருக்குள் இக்கிருமிநாசினிகளை பயன்படுத்த வேண்டாமென்றும் அவர் விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார். அவ்வாறு பயன்படுத்தும் பொழுது இப்புழுக்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கக்கூடுமென்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைப்பு








(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பு நிலையம் மீள புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.உமாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தெல்லிப்பழை பிரதே செயலர் ச.சிவஸ்ரீயால் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் பெயர் பலகையினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் சி.சிவகரன் மற்றும் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ இணைந்து திறந்து வைத்தனர்.

பின்னர் வைபவ ரீதியாக மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் எரிபொருள் விநியோகம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் எரிபொருள் நிரப்பும் இயந்திரங்கள் யாழ்.மாட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதீஸ் ஹசனா அமீர் மற்றும் பெற்றோலிய, கூட்டுத்தாபன அதிகாரிகள் நாடா வெட்டி எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் தெல்லிப்பளை கூட்டுறவு சங்க பணியாளர்கள், தெல்லிப்பழை பிரதேச செயலர், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள், காங்கேசன்துறை பொலிஸ் நிலைய தலைமை நிலைய பொறுப்பதிகாரி K.O.P. அபெயரட்ன, மயிலிட்டி கடற்றொழில் கூட்டுறவுச்சங்க தலைவர், என பலரும் கலந்து கொண்டனர். (9)

# மாகாண சபைத் தேர்தலுக்கு ஐ.தே.க. அஞ்சுகிறது-நிமால்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான அச்சத்தினாலேயே, எல்லை நிர்ணய ஆய்வறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயக்கம் காட்டி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்று நாம் தொடர்ந்தும் வலியுறுத்திக்கொண்டு வருகிறோம்.

பெரும்பான்மையான மாகாண சபைகளின் காலம் முடிவடைந்து விட்டன. இவற்றுக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்துக்கு



இருக்கிறது. எனினும், இது எப்போது இடம்பெறும் என்ற சந்தேகம் இன்னும் நீடித்துக் கொண்டே இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இதுவரை இந்தத் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்தவொரு கருத்தையும் கூறவில்லை. அதை விடுத்து, ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று தான் அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# பாரதம்



## கோடநாடு விவகாரம்

## முதல்வர் பழனிச்சாமியை பதவி விலகக்கோரி ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டவர்கள் கைது



(சென்னை)

கோடநாடு விவகாரத்தில் முதல்வர் எடப்பாடி பழனிச் சாமி மீது குற்றச்சாட்டு எழுந் துள்ள நிலையில், அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற தி.மு.கவினரை பொலிஸார் கைது செய்தனர்.

கோடநாடு விவகாரத் தில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மீது குற்றச்சாட் டுகள் எழுந்துள்ளதால், அவர் உடனடியாக பதவியிலிரு ந்து விலகிட வேண்டுமென் றும் தமிழக ஆளுநர் முதல் வர் மீது அரசியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண் டுமெனவும் நேர்மையான ஐஜி தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக்குழுவை ஏற்படுத்தி மேல் விசாரணை நடத்துவதற்கு உத்தரவு பிற ப்பிக்க வேண்டுமென்பதை யும் வலியுறுத்தி, ஜனவரி 24 ஆம் திகதி கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அக்கட்சியின் தலை வர் மு.க.ஸ்ராலின் ஏற்க னவே அறிவித்திருந்தார்.

அதன்படி, ஆளுநர் மாளிகை எதிரில் நேற்று வியாழக்கிழமை, சென்னை மேற்கு மாவட்டச் செயலா ளர்ஜெ.அன்பழகன், எம்எல்.ஏ. - சென்னை தெற்கு மாவட் டச் செயலாளர் மா.சுப்பிரம ணியன்எம்எல்ஏ. - சென்னை கிழக்கு மாவட்டச் செயலா ளர்பி.கே.சேகர்பாபு, எம்எல்ஏ. - சென்னை வடக்கு மாவட் டச்செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆகியோர் தலை மையில் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. இதில், தி.மு.கவின் பல்வேறு அணிக ளைச் சேர்ந்த தொண்டர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கோடநாடு கொலை, கொள்ளை தொடர்பான வழக்குகளில் முதல்வர் பதவி விலகக்கோரியும், முதல்வர் மீது ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அவர்கள் முழக்கமிட்டனர்.

இதையடுத்து, சென்னை சின்னமலை, ஆளுநர் மாளிகை, அண்ணா பல்க லைக்கழகம் செல்லும் வீதி களில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதை யடுத்து, ஆளுநர் மாளி கையை முற்றுகையிடச் சென்ற தி.மு.கவினரை பொலிஸார் கைது செய்த னர். (4-7)

## "சசிகலா விவகாரத்தில் சட்டப்படி நடவடிக்கை"

### அமைச்சர் எம்.பி.பட்டீல் தெரிவிப்பு



(பெங்களூர்)

சசிகலா விவகாரத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காவல்துறை அமைச்சர் எம்.பி. பட்டீல் தெரிவித்துள் ளார்.

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலி தாவின் நெருங்கிய தோழி யான சசிகலா, சொத்து குவி ப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடை க்கப்பட்டுள்ளார்.

சிறையிலுள்ள சசிக லாவுக்கு அதிகப்படியான சலுகைகள் வழங்கப்பட்டு ள்ளது என்பது தற்போது, தகவல் அறியும் சட்டம் மூலம் தெரியவந்துள்ளது.

இது குறித்து இந்திய தகவல் அறியும் சட்ட மூல ஆர்வலர் குறிப்பிட்டுள்ளதா வது,

சசிகலாவுக்கு சிறையில் 5 அறைகள் ஒதுக்கப்பட்டு ள்ளன. சிறையில் எந்த கைதிகளுக்கும் உணவு களை சமைக்க அனுமதி கிடையாது. அப்படியிருக்க சசிகலாவுக்கு சமையல் அறை மற்றும் சமைப்பதற்கு ஒரு பெண் கைதியும் ஏற்பாடு செய்யப்பட்டு சிறை அலுவல ர்களால் கொடுக்கப்பட்டுள் ளது.

மேலும், சசிகலாவை சந்திக்க வரும் பார்வையா ளர்கள் கும்பலாக வருவ தும், நேரடியாக அவரது அறைக்குச் சென்று அவரு டன் பேசுவதையும் வழமை யாக கொண்டுள்ளனர்.

இதற்கு முன் சசிகலாவு க்கு சலுகைகள் வழங்க கர்நாடக சிறைத்துறை டி.ஜி.பி. சத்யநாராயணராவ் 2 கோடி (இந்திய ரூபா) இலஞ்சம் பெற்றதாகவும் சிறை விதி களை மீறி சசிகலாவுக்கு 4 விசேட அறைகள் ஒதுக்கப்ப ட்டதும், அவர்களுக்கு தனி சமையலறை ஏற்பாடு செய் யப்பட்டு இருந்ததும் மற்ற கைதிகளுக்கு அனுமதிக்க ப்படும் பார்வையாளர்கள் எண்ணிக்கையை விட சசி கலாவுக்கு அதிக அளவி லான பார்வையாளர்களை சந்திக்க அனுமதி அளிக் கப்பட்டது போன்ற விதி மீறல்கள் நடந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சசிகலா வுக்கு வழங்கப்பட்ட சலு கைகள் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வினய்குமார் தலைமையில் உயர்மட்ட குழுவை கர்நாடக அரசு நியமித்திருந்தது.

அந்தக் குழு இது குறி த்து முழு விசாரணை நட த்தி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிக்கை சமர்ப்பித்தி ருந்தது. அந்த அறிக்கை யின் தகவல்களே தற்போது வெளியாகி பரபரப்பை ஏற் படுத்தியுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.


இதுகுறித்து கருத்து தெரி வித்த ரூபா, "தான் கூறிய புகார்கள் அனைத்தும் உண்மை என்று நிரூபிக்கப்பட்டு உள் ளது. தவறு செய்தவர்களை சட்டப்படி தண்டிக்க வேண் டும்" என்றார்.

இந் நிலையில் இது தொட ர்பில் கர்நாடக மாநில காவல் துறை அமைச்சர் எம்.பி. பட்டீல் பெங்களூரில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலா ளர்களுடான சந்திப்பின் போது, "பரப்பன அக்ர ஹாரா சிறையில் எழுந்த புகார் குறித்து விசாரணை குழு அரசிடம் அறிக்கை வழங்கியுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள அம் சங்களை கவனித்தேன். ஊடகங்களிலும் இதுபற்றி வெளியானதைப் பார்த்தேன்.

சட்டத்துக்கு மேலான வர்கள் யாரும் இல்லை. சசிகலா விவகாரத்தில் சட் டப்படி நடவடிக்கை எடுக் கப்படும்" என்றார். (4-7)

## அடுக்குமாடியில் தீ; ஏழு சிறுவர்கள் பலி



(டமாஸ்கஸ்)

சிரியாவில் 4 மாடிக ளைக் கொண்ட குடியிருப் பில் ஏற்பட்ட தீ விபத்தில், தீயில் கருகி சிறுவர்கள் 7 பேரும் பரிதாபமாக உயிர் இழந்தனர்.

நேற்றையதினம் சிரிய தலைநகர் டமாஸ்கசின் மத்திய பகுதியில் உள்ள மனாக்லியா என்கிற இடத் தில் 4 மாடிகளை கொண்ட குடியிருப்பு உள்ளது.

4 ஆவது மாடியில் உள்ள ஒரு வீட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறு வர்கள் 7 பேர் இருந்த னர்.

சற்றும் எதிர்பாராத வகையில் அந்த வீட்டில் திடீரென தீப்பிடித்தது.

கண்இமைக்கும் நேரத் தில் தீ மளமளவென வீடு முழுவதும் பரவியது.

இதனால் சிறுவர்கள் வெளியேற முடியாமல் உள்ளே சிக்கிக்கொண்ட னர். தீயில் கருகி சிறுவர் கள் 7 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். (4-7)

## இந்தோனேசியாவி

## உயிரிழப்பு 10 ஆ

### 2 ஆயிரம் பேர் இ





(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் பெய்துவரும் கனமழையி னால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் இது வரை 10 பேர் உயிரிழந்துள் ளதாகவும் 2 ஆயிரத்திற் கும் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித்தனர்.

மத்திய இந்தோனேசியா வில் கனமழை பெய்துவரு வதால் அங்குள்ள அணை கள் நிரம்பி வழிகின்றன. இதனால் மத்திய இந்தோ னேசிய பகுதிகளில் நேற்று முன்தி னம் பின்னிரவிலிருந்து வெள்ளம் பெருகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இதுகுறித்து கோவா மாவட்ட ஆட்சியர் அத்நான் புரிச்டா இச்ஸான் தெரிவித்த விபரம்,

இந்தோனேசியாவின் எதிர்பா ராத கனமழையினால் பில்லி பில்லி அணையில் வெள்ளநீர் நிரம்பிவிட் டது. அணைக்கு ஆபத்து ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டதால் நீரை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. இதனால் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரி

க்கை
காசம்
இது
ஆற்றே
பெருக்
பல இட
விட்டதா
இந்
யின்
மற்றும்
ஜாவா
மில் நி
கத்தில்
நேற்
னால்

## நேட்டோவிலிருந்து படைய

## அமெரிக்க ஜனாதிபதியின் மு



(வோஷிங்டன்)

நேட்டோ படையில் இரு ந்து அமெரிக்க படையி னரை மீளப்பெறுவது குறி த்த அமெரிக்க ஜனாதிபதி யின் முடிவுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வாக் கெடுப்பு அமெரிக்க நாடாளு மன்றத்தில் நடைபெற்ற நிலையில் அதற்கு பெரும் பான்மையான நாடாளும ன்ற உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

சர்
பான
வாத அ
நாடுக
கும் ப
இந்
இருந்த
என ஜ
கடந்த
இந்
காரம்
ளுமன்
யில் தா

## அமெரிக்கா

## துண்டித்தது

(கராகஸ்)

அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவை வெனிசுவெலா முறித்துக் கொண்டுள்ளது.

அதன்படி அமெரிக்க இராஜதந்திரிகள் நாட்டை விட்டு வெளியேற 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்ப ட்டுள்ளது.

இந்த அறிவிப்பை வெனி சுவெலா ஜனாதிபதி நிக்க லோஸ் மதுரோ நேற்று வெளியிட்டுள்ளார்.

இடைக்கால ஜனாதிப தியாகத் தன்னை அறிவித் துக் கொண்ட எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோ, இதனை ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் உள்ளிட்ட சர் வதேச அரசாங்கங்கள் வர வேற்றுள்ளதாகவும் தெரி வித்துள்ளார்.

கெய்டோவிற்கு அமெரிக்கா ஆத ரவை வெளிப்படுத்தியதை தொடர் ந்து, இராஜதந்திர உறவை முறித்துக் கொள்வது தொடர்பான ஒருதலை பட்ச முடிவை மதுரோ அறிவித்து ள்ளார்.

வெனிசுவெலாவில் கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, பாரிய மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்ப ட்டது.

பிரதான எதிர்க்கட்சியும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து தேர் தலைப் புறக்கணித்தமையால் அங்கு 46.1 வீத வாக்குகள் மட்டுமே பதி வானது.



இத

# வெளிநாடு

## ...ாவில் நிலச்சரிவு ...0 ஆக உயர்வு!

### ...பர் இடம்பெயர்வு



...க்கை விடுக்கவும் எங்களுக்கு அவகாசம் இல்லை.

இதுவே மக்கள் குடியிருக்கும் ஆற்றோரப் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுக்க காரணமாகிவிட்டது. பல இடங்களில் பாலங்கள் உடைந்து விட்டதாகத் தகவல்கள் வந்துள்ளன.

இந்தோனேசியாவின் பருவ மழையின் போது கொடிய நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளம் அடிக்கடி நிகழும். ஜாவாவின் பிரதான தீவில் சுகாபூமில் நிலச்சரிவில் இந்த மாத தொடக்கத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளத்தினால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது. அடிக்கடி இங்கு கொடிய நிலச்சரிவு பகுதிகளில் சென்று தேடும் படலம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தற்போது வெள்ளப் பாதிப்பு காரணமாக 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அணை நீர் பெருகும் ஆற்றங்கரையோர குடியிருப்புவாசிகள் வெளியேற்றப்பட்டு அரசு அலுவலகங்களிலும் மசூதிகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இச்ஸான் தெரிவித்தார். (4-7)

## வெனிசுவெலாவில் வன்முறை பதினாறு பேர் உயிரிழப்பு





(கராகஸ்)

வெனிசுவெலாவில்ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிரான மற்றும் ஆதரவு போராட்டங்களின் போது ஏற்பட்ட மோதல்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெனிசுவெலாவில்ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவின் ஆட்சியில், அரசியல் சர்ச்சைகள் மற்றும் அரசுக்கு எதிரான போராட்டங்களால் நிலையற்ற தன்மை ஏற்பட்டது. இந்த எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. எதிர்க்கட்சியால் புறக்கணிக்கப்பட்ட இந்த தேர்தலில், மதுரோ வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானார்.

ஆனால், இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள், நிகோலஸ் மதுரோ பதவி விலக வேண்டும் என்றும், புதிய தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றன. மதுரோவுக்கு எதிரான போராட்டம் மற்றும் ஆதரவுப் போராட்டங்களால் பல்வேறு பகுதிகளில் மோதல் வெடித்தது.

ஜனாதிபதி மதுரோவுக்கு எதிராக, இராணுவத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன், பொதுமக்களையும் வீதிக்கு வந்து போராடும்படி அழைப்பு விடுத்தனர். அதன் பின்னர், போராட்டம் தீவிரமடைந்து பதற்றம் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மதுரோவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டம் நடைபெற்றது. இதில் போர்த்துக்கீச, பரினாஸ், டாச்சிரா, கராகஸ், அமமேசானஸ்மற்றும்பொலிவார் மாநிலங்களில் நடந்த மோதல்களில் 16 பேர் உயிரிழந்திருப்பதாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், பாராளுமன்ற சபாநாயகர்ஜுவான்கெய்டோ, தன்னை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பிரகடனம் செய்தார். அவருக்கு அமெரிக்கா, கனடா, ஆர்ஜென்டீனா, பிரேசில், சிலி உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஜனாதிபதி மதுரோ பதவி விலகவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. (4-7)

## ...படையினரை மீளப்பெறல் ...பின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு



சர்வதேச இராணுவ அமைப்பான நேட்டோ படையினர் பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகமாக உள்ள நாடுகளில் அமைதியைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த 'நேட்டோ' அமைப்பில் இருந்து அமெரிக்கா வெளியேறும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஆண்டில் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், குறித்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணை மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பில் ட்ரம்பின் முடிவுக்கு எதிராக பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

அதற்கமைய 'நேட்டோ' அமைப்பில் இருந்து அமெரிக்கா விலகக் கூடாது என 357 உறுப்பினர்களும், விலகலாம் என 22 உறுப்பினர்களும் வாக்களித்தனர். (4-7)

## தென்கொரிய போர்க்கப்பலை வட்டமிட்ட ஜப்பான் விமானம்

(சியோல்)

தென்கொரியா கடல் பகுதியில் தங்கள் நாட்டின் போர்க் கப்பலை ஜப்பான் விமானம் வட்டமிட்டதற்கு தென்கொரிய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.



தென்கொரியா நாட்டின் கடல் பகுதிக்கு மேலாக பறக்கும் அனுமதி பெறாத விமானங்கள் கண்டுபிடித்து சுட்டு வீழ்த்தும் வகையில் அதிநவீன ரேடார்களை அமைக்க தென்கொரியா தீர்மானித்தது. இந்த முடிவுக்கு ஜப்பான் அரசு எதிர்ப்பு தெரிவித்தது.

இதனால், இருநாடுகளுக்கும் இடையில் சில முக்கிய பேச்சுவார்த்தைகளை ஜப்பான் நிறுத்தி விட்டது.

இந்நிலையில், ஜப்பான் நாட்டு கடற்படையை சேர்ந்த ஒரு விமானம் தங்கள் நாட்டின் போர்க் கப்பலை குறிவைத்து' வட்டமிட்டதாக நேற்று முன்தினம் குறிப்பிட்ட தென்கொரிய அரசு, ஜப்பானின் இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக ஜப்பான் அரசு இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்து வருகிறது. (4-7)

## ...கோவுடனான உறவை ...ந்தது வெனிசுவெலா



இதனால், ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய நிக்கோலஸ் மதுரோ 58 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

எனினும், இவரது வெற்றியை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி, நிக்கோலஸ்மதுரோவை பதவி விலக வலியுறுத்தியும், புதிய தேர்தலை நடத்தக் கோரியும் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்த நிலையில் இடைக்கால ஜனாதிபதி என்ற கெய்டோவின் அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## வங்கியில் துப்பாக்கிச் சூடு ஐந்து பேர் உயிரிழப்பு

(மியாமி)

அமெரிக்காவில் உள்ள செப்ரிங் பகுதியில் உள்ள வங்கியில் மர்ம நபர் திடீரென துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள செப்ரிங் பகுதியில், நேற்றுக் காலை துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர், திடீரென் கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தினார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.




தாக்குதல் நடத்திய நபர் 21 வயதுடைய செப்ரிங் பகுதியை சேர்ந்தவராக கருதப்படுகிறது. மேலும் இந்தத் துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் இன்னும் தெரியாத நிலையில், இது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையங்களின் அறிக்கையின் படி, அமெரிக்காவில் 2017 ஆம் ஆண்டில்கிட்டத்தட்ட 40,000 பொதுமக்கள் இதுபோன்ற திடீர்த் தாக்குதல்களால் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அமெரிக்க மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினை இந்த அளவுக்குத் தீவிரமாக இருந்த போதிலும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கடும் சட்டங்கள் இயற்றும் முயற்சிகள் பல ஆண்டுகளாக இழுபறியாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது. (4-7)

# பலாலி விமான நிலைய ஓடுபாதை அபிவிருத்திக்கு 2 பில்லியன் ரூபா

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் 2 பில்லியன் ரூபாவை ஒதுக்கவுள்ளது. பிராந்திய விமான நிலையங்களுக்கு, குறிப்பாக இந்தியாவுக்கான விமானப் பயணங்களை ஆரம்பிப்பதற்கான முதல் நடவடிக்கையாகவே, விமான ஓடுபாதையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.



வடக்கு அபிவிருத்தி அமைச்சு, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை, விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கவுள்ளது.

போர்க்காலத்தில் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த பலாலி விமான நிலையத்தை, இந்தியாவின் நகரங்களுக்கான பயணங்களை மேற்கொள்ளும் வகையில் பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம், சில ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டது.

இந்த விமான நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு கூட்டு அரசாங்கம் பதவியிலிருந்த போது இந்தியா உதவ முன்வந்தது.

எனினும், இதுதொடர்பான இணக்கப்பாடுகள் எட்டப்படாமல் இழுபறி நிலை காணப்பட்டது.

இந்த நிலையில், தற்போது, ஓடுபாதையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பின்னர், பிராந்திய விமான நிலையங்களுக்கான சேவைகளை நடத்தும் வகையில், அனைத்துலக விமான நிலையமாக அதனை அபிவிருத்தி செய்வதற்கான உதவியை இந்தியாவிடம் கோருவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (இ-7)

## போலிச் செய்திகள் அதிகரிப்பு

# முகநூல் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முகநூல் நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தியுள்ளார். மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.



தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான முகநூல் நிறுவனத்தின் பொதுக்கொள்கைப் பணிப்பாளர் அன்கிதாஸ் மற்றும் அதிகாரிகள் குழு இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டது.

இணையப் பாதுகாப்பு, பெரிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சந்தை வாய்ப்பு, அதிகரித்து வரும் போலிச் செய்திகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

முகநூல் அதிகாரிகள் குழுவுடன் தாம் தொடர்ந்தும் நெருங்கிப் பணியாற்றவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ டுவிட்டர் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். (இ-7)

## நீதிமன்றச் செயற்பாடுகளில் நேரடித் தலையீடு

# மைத்திரியுடன் இணைந்து வழக்குகளை தடுக்கும் கோத்தபாயவை உடன் கைது செய்ய வேண்டும்!

## ஆசு மாரசிங்க காட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் இணைந்தே இன்று வழக்குகளைத் தடுக்கும் நடவடிக்கையை எடுத்து வருகின்றனர்.

யாருடைய வழக்கை எப்போது எடுக்க வேண்டும். யாரைக் காப்பாற்ற வேண்டும் என்ற அனைத்துமே அவர்கள் கையில் தான் உள்ளது. இவர்கள் இருவரும் நீதிமன்றச் செயற்பாடுகளில் நேரடியாகத் தலையிடுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

வசிம் தாஜுடீன், லசந்த விக்கிரமதுங்க ஆகியோரின் கொலைகளை மறைக்க கோத்தபாய ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து உண்மைகளை மூடி மறைக்கும் நடவடிக்கையை எடுத்து வருகின்றார்.

எனவே கோத்தபாயவை உடனடியாக கைது செய்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை கடன் இணக்கம் தொடர்பிலான திருத்தச் சட்ட விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக் கட்சியின் மாவட்ட தலைவர்கள் நியமனம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்.மாவட்ட தலைவராக முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராம நாதன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-60)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அலுமினியம்

“ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டியிருக்கிறது! பெண் மற்றும் மாப்பிள்ளைக்கு என்ன பரிசு கொடுக்கலாம்?'' என்று ஒருத்தர் கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்!

ஒரு அலுமினியக் கிண்ணத்தை வாங்கிக்கொண்டு போய் கொடுங்கள் என்றா சொல்லுவீர்கள்?

அப்படி யோசனை சொன்னால் உங்களையே ஒரு மாதிரியாகப் பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்! நல்லாத்தானே இருந்தார்; ஏன் இப்படி ஆகிவிட்டார் என்று!

‘‘அலுமினியம்'' என்று சொன்னாலே, சீப்பாக நினைக்கும் அளவுக்கு “அலுமினியம்” ஒரு “சீப்” பான பொருளாகப் போய் விட்டது!

ஆனால் ஒரு நூறு வருடத்திற்கு முன்னால் இப்படி ஒரு யோசனை சொல்லியிருந்தால் உங்களை யாரும் தப்பாக நினைத்திருக்க மாட்டார்கள்!

நூறு வருடத்திற்கு முன்னால் தாய்லாந்து மன்னர் பிரான்சிற்குப் போய்க் கொண்டு இருந்தாராம்! அப்போது அவருக்கு பிரெஞ்சு சக்கரவர்த்தி மூன்றாம் நெப்போலியன் ஒரு பரிசு கொடுத்தாராம்!

என்ன பரிசு தெரியுமா? அலுமினியத்தில் செய்த ஒரு கைக்கடிகாரச் செயின்! தாய்லாந்து மன்னருக்கு இதில் ரொம்பப் பெருமை! அந்த உயர்ந்த பரிசை மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டாராம்.

அந்தக் காலத்தில் அலுமினியத்தின் விலை தங்கத்தை விட அதிகம்! தங்கம், வெள்ளியைவிட அலுமினியத்தை உயர்வாகக் கருதிய காலம் அது! அலுமினியத்திற்கு அப்படி ஒரு நேரம்! அதற்குக் காரணமும் இருந்தது!

பாக்ஸைட் (Bauxite) என்பது அலுமினியம் இருக்கும் ஒரு தாதுப் பொருள். அதிலிருந்து (Alumina) ‘‘அலுமினா'' என்னும் அலுமினியம் ஒக்சைட்டைப் பிரித்து எடுக்க வேண்டும்.

இப்படிப் பிரித்து எடுக்கும் முறை ரொம்பக் காலத்திற்கு முன்னாலேயே தெரிந்திருந்தது. அதில் ஒன்றும் கஷ்டம் இல்லை! ஆனால், அலுமினாவிலிருந்து அலுமினிய உலோகத்தைப் பிரித்து எடுப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியமாகப் போச்சு! அலுமினியம் என்னும் தனிமத்துக்கும் ஒட்சிசனுக்கும் இடையில் உள்ள பிணைப்பு மிகவும் நெருக்கம்!

விஞ்ஞானிகள் எல்லாம் எவ்வளவோ முயற்சி செய்து செய்து பார்த்தார்கள்! ஒட்சிசனை விரட்டி விட்டு அலுமினியத்தைத் தனியாக எடுக்க முடியவில்லை.

டென்மார்க்கில் ஒரு விஞ்ஞானி. அவர் பெயர் எச்.ஓயர்ஸ்டெட் (H.Oersted). 1825 இல் அவர் ரொம்ப கஷ்டப்பட்டு ஒரு வழியைக் கண்டு பிடித்தார். சிரமப்பட்டுக் கொஞ்சம் அலுமினிய உலோகத்தைத் தயார் செய்தார்.

அதுக்குப் பிறகு, ஜேர்மனில் ஒரு விஞ்ஞானி, ஃபிரீட்சிஸ்வோக்லர் (Freidrich Wohler). அவர் ஒரு வழியாக அலுமினியத்தைப் பிரித்து எடுத்தார். இவர்கள் இரண்டு பேருமே எடுத்த அலுமினியம் மிகவும் சுத்தம் என்று சொல்ல முடியாது!

குறைந்த செலவில் சுலபமான முறையில் அலுமினியத்தை எடுப்பது விஞ்ஞானிகளுக்கு ஒரு பெரிய சவாலாகவே இருந்தது! 1886இல் தான் அதற்கு நேரம் வந்தது!

அமெரிக்காவில், சார்லஸ் மார்ட்டின் ஹால் (Charies Martin Hall) என்று ஒரு மாணவர். ஒரு சுலபமான சிக்கனமான முறையைக் கண்டு பிடித்து விட்டார். இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா?

அதேசமயத்தில் பிரான்சில் பால்கெல்ட் (Paul Herоult) என்னும் இளைஞர் ஒருத்தரும் இதையே கண்டு பிடித்து விட்டாராம். அதற்குப் பிறகு என்ன? உலகத்தில் அலுமினிய உற்பத்தி அதிகமாப் போய் விட்டது! அதனுடைய விலையும் சரிந்து போய்விட்டது!

அலுமினியம், விஞ்ஞானிகளுக்கு விட்டிருந்த சவாலை சமாளித்து விட்டார்கள்! இப்போது நான் உங்களுக்கு ஒரு சவால் விடுகின்றேன். அதாவது கல்யாணமான கணவன்மார்களுக்கு இந்தச் சவால். அதாவது... ஒன்றுமில்லை...

நீங்க தைரியமாக உங்களுடைய வீட்டுக்காரம்மா முன்னால் போய் நின்று, “உனக்கு அலுமினியத்தில் ஒரு செயின் செய்து போட ஆசைப்படுகின்றேன்'' என்று சொல்லிவிட்டு, முழுவதாகத் திரும்பி வந்துவிட வேண்டும்! அவ்வளவுதான்! என்ன? தயாரா?

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

153

இங்குள்ள மக்களின் நிலை பரிதாபத்திற்குரியது என்றும் அந்த நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் என்றும் மிஷனரிமார் எண்ணினர். மிஷனைச் சேர்ந்த ஜியோ டானியல் (Geo Daniel) பின்வருமாறு அறிவித்தார்.

வன்னி மக்களை மதம் மாற்றுவதற்காகத் தான் கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டியவனாக இருந்தும் இவ்வாறு தானே அதைச் செய்யவில்லை என அறிக்கையிட்டு அங்கு பிரசன்னமாய் இருந்தவர்களிடம் சபையின் ஊழியர்கள் சிறந்த பலாபலன்களால் ஆசீர்வதிக்கப்பட்டு தமது பணியில் கடவுளின் வல்லமையையும் பிரசன்னத்தையும் உணரக் கூடியதாய் இருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கும்படி கேட்டார்.


பிரார்த்தனைக்கான இந்த அழைப்பு வன்னித் தமிழர் மத்தியில் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரப்புவதன் மூலம் அவர்களைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதில் மிஷனரிமார் எவ்வளவு ஆர்வமாய் இருந்தனர் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

ஊழியர் உள்ளூர் மக்களின் உதவியுடன் வன்னி மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமத்திற்கும் வீட்டுக்கும் சென்றனர் என்பதை மிஷனரியின் திட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்தப் பிரதேசங்களில் பயணம் செய்வது அவர்களுக்கு மிகவும் சிரமமாகவிருந்தது. இப்பகுதிகளில் உள்ள சீரற்ற வீதிகள், அவற்றின் இருமருங்கும் உள்ள காடுகள் என்பவற்றினால் இன்றும்கூட அங்கு சில சமயங்களில் பயணம் செய்யமுடியாத நிலையுள்ளது.

ஆபத்தான காட்டு விலங்குகளும் மலேரியா நோயின் அச்சுறுத்தலும் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தன. இப்பிரதேசத்து மக்கள் பெரும்பாலும் மதம்பற்றிய உணர்வு இல்லாமல் இருந்தது இவர்களுடைய சிரமங்களை மேலும் அதிகரித்தது.

வன்னி மாவட்டத்தில் அதி தொலைவிலுள்ள கிராமங்களுக்கு வண. பாட்லெற்றுடன் (Rev. Bartlet) சென்ற தேவ சகாயம் என்னும் வவுனியா (விளாங்குளம்) மிஷன் உதவியாளர் இவ்வாறு சொன்னார்:



“வன்னி மாவட்டத்தில் அதி தொலைவிலுள்ள கிராமங்களுக்கு வண. பாட்லெற்றுடன் (Rev. Bartlet) சென்ற தேவ சகாயம் என்னும் வவுனியா (விளாங்குளம்) மிஷன் உதவியாளர், சுவிசேஷ காரருக்கு இந்த இடங்களில் இந்த பெரும் சிர மம் மக்களினது பெரும் அறியாமையாகும். பலரைப் பொறு த்த வரையில் அவர்களுக்கு ஆன்மீக விடயங்களையிட்டு எதுவும் தெரியவில்லை. எனவே ஆன்மீக உண்மைகளை அவர்களுக்குப் புரியவைப்பது மிகவும் கடினமாகவுள்ளது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

சுவிசேஷகாரருக்கு இந்த இடங்களில் இந்த பெரும் சிரமம் மக்களினது பெரும் அறியாமையாகும். பலரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஆன்மீக விடயங்களையிட்டு எதுவும் தெரியவில்லை. எனவே ஆன்மீக உண்மைகளை அவர்களுக்குப் புரியவைப்பது மிகவும் கடினமாகவுள்ளது.

அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாது கவனிப்பாரற்று இருந்த இந்தப் பிரதேசங்களின் மதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுசொல்ல வேண்டியதில்லை. இக்காலத்தில் இந்தப் பிரதேசங்களில் சைவசமயக் கல்விச் செயற்பாடுகள் எதுவும் பிரவேசித்திருக்கவில்லை.

சைவசமய மறுமலர்ச்சியாளரைவிட கிறிஸ்தவ மிஷன்களும் அவர்களின் கல்வி முயற்சிகளும் இங்குள்ள மக்களுக்கு அறிவூட்டின எனச் சொல்வது நியாயமானதே.

சின்னத்தம்பி என்பவர் கிளிநொச்சியில் பெருமளவு பணியை ஆற்றியிருந்தார். மேலும் தேவ சகாயம் என்பவர் வவுனியாவில் கவனம் செலுத்தியிருந்தார்.

தனது அறிக்கையில் தேவ சகாயம் கூறுவதாவது, மிஷனரிமார் வவுனியா மாவட்டத்தில் (விளாங்குளம்) முப்பது கிராமங்களுக்குச் சென்றனர். அவர்கள் சென்ற இடமெல்லாம் மக்கள் அவர்களைச் சந்தோசமாக வரவேற்றதுடன் சில பிற மதக்குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்ற ஆவலாய் இருந்தது போல் தோன்றியது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் அவர்களுடைய சுவிசேஷச் செயற்பாடுகள் நடந்தன. அவை ஊக்கமளிப்பதாகக் காணப்பட்டன. நெடுங்கேணி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆபத்தானதும் பாதுகாப்பற்றதுமான காடுகளினூடாக அவர்கள் நூறு கிராமங்களுக்குச் சென்றனர்.

இவற்றில் பெரும்பாலான கிராமங்களில், சுவிசேஷம் முன்னொரு போதும் பிரசங்கிக்கப்பட்டிருக்கவில்லை. இவர்களுடைய செய்தியைச் சிலர் ஆர்வத்துடன் கேட்டனர். சில இடங்களில் எதிர்ப்பு இருக்கவே செய்தது. இந்தத் தூய்மையான மதத்தின் படி நடப்பது அவர்களால் இயலாத ஒன்று எனச் சொல்லப்பட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் திருச்சபை மிஷனரிச் சங்கத்தினர் எவ்வாறு வன்னிப் பிரதேசத்தைக் கவனித்துக் கொண்டனரோ அதேபோன்று வெஸ்லியன் மிஷனரிச் சங்கத்தினர் மட்டக்களப்பு மாகாணத்தில் தமது முயற்சிகளை மேற்கொண்டனர். அமெரிக்கன் சிலோன் மிஷன் அறிக்கை இவ்வாறு தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு நகரில் வெஸ்லியன் மிஷனின் கீழிருந்த புரட்டஸ்தாந்து திருச்சபை நன்னிலையில் இருக்கக் காணப்பட்டதுடன் அநேகமாக செல்வாக்குடைய எல்லாச் சுதேசிகளையும் பறங்கியரையும் அங்கத்தவர்களாகக் கொண்டிருந்தது.

முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிட்டது போன்று கிழக்கு மாகாணத்தில் வெஸ்லியன் மிஷன் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தது. 1876 இல் மிஷனுடைய அறிக்கை அவர்களது நிலையைச் சுருக்கமாகத் தெரிவிக்கின்றது.

இவ்வருடம் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட மாவட்ட சுதேசிகள் கூட்டத்துக்குச் சென்று விட்டு இப்போதுதான் திரும்பினோம். இந்த ஒன்றுகூடல் பயனளிப்பதாய் இருந்தது.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பாம்புகளை அடையாளம் காண்போம்


## வடமாகாணத்தில் காணப்படும் சில பாம்பினங்கள்

வளைசுத்தி /சுவர்வளையன் - உரு 12: (*Dryocalamus nympha*)

இது வடமாகாணத்தில் பொதுவாக காணப்படக்கூடிய நஞ்சற்ற மெல்லிய ஒரு பாம்பாகும். இது ஆகக்கூடியது 2 அடிவரை வளரக்கூடியது. இது கரியநிறத்தில் வெள்ளைப்பட்டைகளைக் கொண்ட உடலையுடையது. வயிற்றுப்புறம் வெண்மையானது. இவை மிக நன்றாக மரத்தில் ஏறக்கூடியவை. இவை கூரைகள், ஓடுகள் மற்றும் வளைகள் போன்ற இடங்களிலுள்ள சிறிய சிலந்திகள், பூச்சிகள், பல்லிகள் போன்றவைகளை உட்கொள்வதற்காக வந்து அங்கேயே தங்கி விடுகின்றன. இவற்றிற்கும் கறையான்கள் மிகவும் பிடித்தமான உணவாகும். அதேவேளை இது இறுக்கமற்ற தரைப்பகுதி கிடைப்பின் தரைக்குக்கீழாக முற்றுமுழுதாகச் சென்று ஒளிந்து கொள்ளும் வல்லமையும் இதற்குண்டு.

நடத்தை: இவை இராக்கால வழக்கமுடையவை. இரவானதும் மேற்கூரையிலிருந்து வீட்டின் சுவர்வழியாக இறங்கி ஜன்னலோரமாகக் காணப்படலாம். இவை அழுத்தமான செதில்களைக் கொண்டவையாதலால் மின்குமிழ்களின் வெளிச்சம் இவற்றினுடலில் பட்டுத்தெறிக்கும்போது சற்றே மினுமினுப்புடையதாக தெரியலாம். சுவர்வளை இரவில் மின்னியபடி இருக்கும் எனச்சொல்லுவதற்குக் காரணமும் இதுதான்.


இவை கூரைகளின் இடுக்குகளில் அல்லது அங்குள்ள வளைகளில் தங்கி வளைகளைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் கறையான்களைத் தேடித் தமது உணவாக்குகின்றன. அதனாலேயே வளைசுத்தி என்ற காரணப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். அப்படி வளைகளில்



உரு 13: ஊத்தைச்சுருட்டை முதுகுப்புறத் தோற்றம்

ஊர்ந்து செல்லும் நேரங்களில் சிலவேளைகளில் தவறிக் கீழே விழுந்து விடுகின்றன. உங்களில் சிலரிற்கு இப்படியான அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். அதாவது உங்களின் வீட்டின் கட்டிலில் அல்லது தலையணைக்குக் கீழாக அல்லது சுவாமித்தட்டில் அல்லது சுவாமிப் படங்களுக்குப் பின்னாகக்கூட இவற்றைச் சந்தித்திருப்பீர்கள். இரவில் தவறிக்கீழே விழுபவை காலை வேளைகளில் தாழுள்ள பகுதியிலுள்ள பொருட்களுக்குக் கீழாக வெளிச்சத்தை விலத்திச் சென்று பதுங்குகின்றன. நாம் இவ்விடங்களைச்சுத்தம்செய்யும்போது இவை வெளியில்வர 90% மான சந்தர்ப்பங்களில் நச்சுப்பாம் பெனக் கருதி அடித்து விடுகிறோம். உண்மையில் இவை மிகவும் சாதுவான பிராணிகளாகும். வீடு கள் மற்றும் கட்டடங்கள் போன்ற வற்றின் வளைகளைப் பாதுகாப்பதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன. இனி இவ்வாறான சந்தர்ப்பங்கள் நேருமாயின் ஒரு சிறிய தடியொன்றினால் பாம்பினைப் போத்தல் ஒன்றினுள் தட்டி வெளியில் விட்டு விடுங்கள். இதன் மூலம் பாம்பை மட்டுமல்ல சூழலையும் உங்களையும் சேர்த்துப் பாதுகாத்துக் கொள்ளுகிறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள்.

உரு. 12இல் சுவர்வளை அல்லது சுவர்வளையம் என்று அழைக்கப்படுகின்ற இருவேறு இனங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் a, b, c யாவும் ஒரே இனமாகும். இவற்றுள் a, c நிறத்திலுள்ளவைகளை வடமாகாணத்தில் பொதுவாகக் காணலாம். இதைவிட d என்று காட்டப்பட்டுள்ள இனமானது மிகவும் அரிதானது. இலங்கையில் ஒருசில இடங்களில் மாத்திரம் பிரதானமாக யாழ்ப்பாணத்திலேயே இருப்பதாக அறியப்பட்ட ஓர் இனமாகும். மிகவும் பாதுகாக்கப்பட வேண்டியவைகளுள் அடங்குகின்றன. இவ்விரு இனங்களும் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அதேபோன்று இவற்றின் நடத்தையும் ஒன்றுபோலவே இருக்கும். இவ்விரு இனங்களையும் வேறுபிரித்து அறிவதற்கு உடலின் குறுக்காகவுள்ள முதுகுப்புறச் செதில்களை எண்ணவேண்டும். அதேபோல் குதச்செதிலையும் (பார்க்க: உரு 1.2) அவதானிக்க வேண்டும். முதுகுப்புறச் செதில்கள் 13 ஆக இருந்தால் *Dryocalamus nympha*; அதேவேளை 15ஆக இருந்தால் *Dryocalamus gracilis* ஆகும். அதேபோன்று குதச் செதில் பிரிக்கப்பட்டிருந்தால் அப் பாம்பு *D.nympha*; ஆனால் தனியான குதச்செதிலாக இருந் தால் அது *Dryocalamus gracilis* ஆகும்.



உரு 12: நிறவேறுபாடுகளைக் காட்டுகின்ற சுவர் வளையன்கள் (இருவேறு இனங்கள்)
a,b,c : *Dryocalamus nympha* ; d: *Dryocalamus gracilis*
a - தலையிலிருந்து வால்வரை முதுகுப்புறம் மண்ணிறமானது இடையிடையே வெண்ணிறப்பட்டைகள் காணப்படும்.
b - தலையிலிருந்து கழுத்துவரை ஆழ்ந்த கரும்கபிலமாகவிருக்க மிகுதிப்பகுதி மண்ணிறமானது இங்கு பட்டைகள் மஞ்சள் நிறமானது.
c - தலையிலிருந்து வால்வரை முதுகுப்புறம் கருமைநிறமாகவிருக்க இதில் வெண்ணிறப்பட்டைகள் காணப்படும்.
d - தலையிலிருந்து வால்வரை முதுகுப்புறம் கருமைநிறமானது இதில் தலையிலிருந்து கழுத்துவரை கருமை சற்றுத் தூக்கலாகவிருக்கும். இடையிடையே வெண்ணிறப்பட்டைகள் காணப்படும்.

ஊத்தைச்சுருட்டை / வைக்கோல் சுருட்டை (உரு 13: **(Banded Wolf snake - *Lycodon striatus*)**

இது இலங்கையின் ஈரவலயத்திலேயே அதிகமாகக் காணப்படுபவையாகவிருந்தாலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுவதற்கான வாய்ப்புகளுண்டு. இவை தரை வாழ்க்கைக்குரியவை. பெரும்பாலும் ஆறுகள், குளங்கள், கிணறுகள், நெல் வயல்கள் போன்றவற்றை அண்டியுள்ள கற்கள் மற்றும் உக்கும் குப்பைகூழங்களுக்குக் கீழாகக் காணப்படலாம். இவை இலங்கையில் மாத்திரம் காணப்படுகின்ற நஞ்சற்ற ஒரு பாம்பாகும். இது ஆகக்கூடியது $1\frac{1}{2}$ - 2 அடி வரை வளரக்கூடியது. இவற்றின் தலை, கழுத்துப்பகுதி ஆழ்ந்த கரும்கபிலம் அல்லது கருமை நிறமாகவிருக்க தொடர்ச்சியான வெள்ளை அல்லது மஞ்சள் நிறக் குறுக்குப்பட்டைகள் வால்வரை செல்லும். இப்பட்டைகளிற்கிடையேயான இடைவெளியானது வால் நோக்கிச் செல்லும் போது மெல்ல மெல்லக் குறைந்து சென்று மறைந்து விடும்.



உரு 14: இருவேறு நிலைகளில் காட்டுப்பாம்பு
a - சாதாரணநிலை;
b - கழுத்தை அகலவிரித்துப் பயமுறுத்தல்

நடத்தை: இராக்கால வழக்கமுடையவை. குப்பைகளிற்குக் கீழாகக்காணப்படுவதால் ஊத்தைச் சுருட்டை என அழைக்கிறார்கள். புல்லிகள், சிறிய நகருயிர்கள் போன்றவற்றை உண்ணும். அருட்டப்பட்டால் பந்துபோல தமதுடலை சுருட்டி தலையை அதனுள் மறைத்துக்கொள்ளும் இயல்புடையது. வெளிப்புறத் தோற்ற அமைப்பினாலேயே நச்சுப் பாம்பென்றெண்ணி அடித்துவிடுகின்றனர்.

காட்டுப்பாம்பு (உரு 14: **(Trinket snake - *Coelognathus helena*)**

இது இலங்கையின் சகல வலயங்களிலும் பரவலாகக் காணப்படுகின்ற நஞ்சற்ற ஓர் பாம்பாகவிருப்பினும் வட மாகாணத்தைப் பொறு த்தமட்டில் இவற்றைப் பார்ப்பது சற்றுக் குறைவு தான். இது இரண்டு வேளைகளிலும் நடமாடினாலும் பெரும்பாலும் பகல்வேளைகளையே விரும்புகின்றன. இவை கபில நிற உடலில் குறுக்குக் கோடுகளையும் இருபக்கவாட்டி லும் வால் வரை செல்லும் நீண்ட கோடுகளையும் கொண்டவை. இதைவிடக் கழுத்தில் இரு கரிய கோடுகள் காணப்படும். வயிற்றுப் புறம் முற்றுமுழுதாக வெண்மை நிறமானது. ஆகக்கூடிய நீளமாக $2\frac{1}{2}$ அடி வரை வளரக்கூடியது.

நடத்தை: இது காடுகளைத் தவிர அடர்ந்த புல் பூண்டுகள், ஈரப்பற்றுள்ள வயல்கள் போன்ற இடங்களில் காணப்படும். சிறியவையாக இருக்கும்போது அங்குள்ள பூச்சிகளையும் நகருயிர்களையும் உண்கின்றன. நன்றாக வளர்ந்தவை சுண்டெலிகள், அகழான்கள், சிறிய பறவைகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் போன்றவற்றை உண்ணும். சாரைப்பாம்பிற்கு அடுத்தபடியாக எலிகளைத் தேடிச் சென்று அழிக்கக்கூடியவை இப் பாம்புகளேயாகும். பொதுவாக சற்று ஈரப்பதனான இடங்களையே இவை விரும்புகின்றன. வறண்ட காலநிலைகளில் கறையான் புற்றுக்கள், எலிவளைகள் போன்ற இடங்களில் ஒதுங்கிக் கொள்கின்றன. இவற்றை இலகுவாகக் கையாள முடியும். அருட்டப்பட்டால் தலையிலிருந்து முற்பாதியுடலை விரித்து தாமொரு நச்சுப் பாம்பென்பது போலகாட்டிக் கொள்ளும். அதே நேரம் வால் பகுதியையும் மிக அதிகமாக அசைத்துக் கொள்ளும். இந் நடத்தையினாலேயே இவை கொல்லப்படுகின்றன. ஆனால் வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் இவற்றிற்கான இருப்பிடங்களின் எண்ணிக்கை குறைவடைவதே இப்பாம்புகளிற்குப் பெரும் சவாலாக உள்ளது. அதாவது இங்குள்ள வயல்நிலங்கள் தோட்டவெளிகள் மற்றுங் காணிகளில் இப்போது கட்டடங்கள்தான் முளைத்துள்ளன.

நிலத்தில் ஓர் சிறிய பாகத்தைத்தானும் புற்கள் வளர்வதற்கோ அல்லது சிறிய மரங்கள் நடுவதற்கோ விடாமல் சகல இடங்களையும் கொங்கி றீட்டினால் மூடிவிடுகிறார்கள். இது இயற்கைச் சமநிலையைப் பெரிதும் பாதிப்பதுடன் இப்பாம்புகளின் உயிர் வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்குகின்றது.

(வளரும்)

கலாநிதி அபிராமி சிவரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 219 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 219 க்கான கேள்வியும் விடையும்:**

முகத்தில் வெப்ப உணரிகளைக் கொண்ட குழிகள் எப்பாம்பினங்களில் காணப்படும்?

மலைப்பாம்புகள் **(pythons)** மற்றும் விரியன் பாம்புகள் **(vipers)**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 220

கிலுகிலுப்பை என்னும் அமைப்பை கொண்ட பாம்பினம் எது?

**புதிர் 219 இற்கான விடைகளை 04.02.2019 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப்-பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 220**

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................



போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெல்லிப்பழை, பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# போதைப் பாவனையில் யாழ்ப்பாணம் முதலிடம்

## விழிப்புணர்வு நிகழ்வில் பொலிஸார் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸாரின் ஏற்பாட்டில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் காலை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே கோனார தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச உபபொலிஸ் அத்தியட்சகர் தசநாயக்கவும், சிறப்பு விருந்தினராக பாடசாலை அதிபர் பவளகுமாரனும் கலந்து கொண்டனர்.



நிகழ்வில் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உபபொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் போதைக்கு ஆளாகாமல் இருப்பது எப்படி. போதைப் பொருள் பாவித்தால் ஏற்படும் பின் விளைவுகள் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவூட்டினர்.

அதனைத் தொடர்ந்து நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களின் நடிப்பில் போதைப்பொருள் விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் இடம்பெற்றது.

இலங்கையில் போதைப் பொருள் பாவனையில் யாழ்ப்பாணம் முதலாம் இடத்தை வகிப்பதாகவும், யாழில் நாவற்குழிப் பகுதி போதைப் பொருள் தொடர்பில் அதிக ஈடுபாடு கொண்ட பகுதியாகவும் இனங்காணப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன், மாவட்ட புலனாய்வு பொறுப்பதிகாரி ஜெயரோசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-30)

# ஞானசார தேரரின் விடுதலை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது!

## அமைச்சர் வஜிர மறுப்பு



(கொழும்பு)

சுதந்திர தினத்தில் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் அரசியலமைப்புக்கு இணங்க ஜனாதிபதியே தீர்மானிப்பார் என்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் இம்முறை விடுதலை செய்யப்படுவாரா? என்பது தொடர்பில் இப்போது எதுவும் கூற முடியாது எனவும் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை சுதந்திர தினத்தின் போது ஞானசார தேரரை விடுதலை செய்வது தொடர்பில் பல தரப்பினரிடத்திலும் எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ளது.

இந்நிலையில் அவர் விடுதலை செய்யப்படுவாரா? என ஊடகவியலாளர் ஒரு வர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. எனினும் அதற்கான முடிவை அவர் தன்னிச்சையாக மேற்கொள்ள மாட்டார்.

சிறைக் கைதிகளின் தண்டனைக் காலத்தில் அவர்களின் நன்னடத்தை செயற்பாடுகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு அது தொடர்பான அறிக்கையைப் பெற்றுக்கொண்டே விடுதலை தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொள்வார்.

சட்டமா அதிபரினூடாக சிறைச்சாலை ஆணையாளரின் ஏற்பாட்டில் நீதியமைச்சால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய பரிசீலிப்பிற்கு பின்பே கைதிகள் விடுதலை செய்யப்படுவர்.

நாட்டில் புதுவருடம், பொஸன், சுதந்திரதினம் போன்ற விசேட நாட்களில் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர்.

இம் முறை சுதந்திர தினத்திலும் கைதிகள் விடுதலை இடம்பெறும். ஞானசார தேரரின் விடுதலை தொடர்பிலும் மேற் குறித்த விடயங்கள் பரிசீலிக்கப்பட்டு அதற்கிணங்கவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 4 வீதிகளுக்கு மீள் தாரிடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நான்கு வீதிகள் 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி மூலம் மீள்தாரிடப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டம் 2018ஆம் ஆண்டு இறுதியிலும், 2019ஆம் ஆண்டு ஆரம்பத்திலும் இடம்பெற்றதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை தெரிவித்துள்ளார்.

கண்டுவில் வீதி, சாரதா வீதி, ஆசிரியர் வீதி மற்றும் மடத்தடி முதலாம் ஒழுங்கை ஆகியனவே இவ்வாறு மீள் தாரிடப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரசபையின் வரவு-செலவுத் திட்டத்திலும் வீதி செப்பனிடலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)



# கசிப்பு உற்பத்தி; மூவர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி- நாவற்குழிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கைது நடவடிக்கையை சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் நாவற்குழி பிரதேசம் போதைப்பொருள் பாவனை அதிகமுள்ள பகுதியாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)



தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் இருந்து விழிப்புணர்வு பேரணி கொக்குவில் பொது நூலகத்தை சென்றடைந்தது.அங்கு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் இடம்பெற்றது. இதில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் , செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் , நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், அதிபர் , ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பிரிகேடியர் பிரியங்கவுக்கு எதிரான வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டது

## கொமன்வெல்த் பணியகத்திடம் முறையீடு

(கொழும்பு)

லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை, வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்திடம் இலங்கை தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தல்பஹேவ, இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில்,

"பிரிகேடியர் பெர்னாண்டோ அப்போது இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருந்தார். எனவே அவருக்கு இராஜதந்திர விலக்குரிமையும், சிறப்புரிமைகளும் இருந்தன.



பிரிகேடியர் பிரியங்க வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகத்திடம் தெரிவித்துள்ளோம்.

இந்த வழக்கு கடந்த 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர், இலங்கை அரசாங்கம், பிரித்தானிய வெளி விவகார பணியகத்திடம் எதிர்ப்பை வெளியிட்டது.

இதுதொடர்பாக, அளிக்கப்பட்ட சமர்ப்பணத்தில், பிரிகேடியர் பிரியங்க, பிரித்தானியாவை வதிவிடமாக கொண்டவரில்லை.

இராஜதந்திர தலைவராக பிரித்தானியாவுக்கு கடமைப் பயணம் மேற்கொண்டிருந்தார். எனவே அவருக்கு விலக்குரிமையும், முன்னுரிமைகளும் இருந்தன.

எமது இந்த நிலைப்பாட்டை அவர்களுக்கு கூறியிருக்கிறோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்ற பதிலுக்காக காத்திருக்கிறோம்.

வழக்கு விசாரிக்கப்பட முன்னரே, எமது எதிர்ப்பை சமர்ப்பித்திருந்தோம்.

ஆனாலும், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளி விவகாரப் பணியகத்துக்கும், நீதிமன்றத்துக்கும் இடையில் உள்ளக கலந்துரையாடல் நடந்ததா? என்று எமக்குத் தெரியாது. ஆனால் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திவிட்டோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ரஷ்ய பிரதி பாதுகாப்பு அமைச்சருடன் இலங்கைத் தூதுவர் தயான் சந்திப்பு



(மொஸ்கோ)

ரஷ்ய பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ஜெனரல் அலெக்சான்டர் போமின், ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜெயதிலகவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இருதரப்பு இராணுவ மற்றும் இராணுவ தொழில் நுட்ப ஒத்துழைப்பு, மேலதிக முன்னேற்றங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது, கலந்துரையாடப்பட்டுள்ளது.

ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு ரஷ்யா ஏற்கனவே விருப்பம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்கக் கப்பலுக்கு பொருட்கள் விநியோகம்

(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படையின் யு.எஸ்.எஸ்.ஜோன் சி ஸ்ரெனிஸ் விமானந்தாங்கி கப்பலுக்கு இலங்கையிலுள்ள அமெரிக்கக் கடற்படையின் தற்காலிக விநியோக மையத்தில் இருந்து பொருட்களின் விநியோகம் இடம்பெறுவதாக அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியப் பெருங்கடலில் அமெரிக்கக் கடற்படையின் போர்க்கப்பல்களுக்குத் தேவையான விநியோகங்களை இலங்கையின் ஊடாக மேற்கொள்வதற்கான பாதுகாப்பு ஒத்துழைப்பு இணக்கப்பாடு நடைமுறையில் இருந்து வருகிறது.

இதற்கமைய ஏற்கனவே கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் திருகோணமலை ஊடாகவும், டிசெம்பரில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாகவும் அமெரிக்க போர்க்கப்பல்களுக்கான விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது மூன்றாவது முறையாக, யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் விமானந்தாங்கி கப்பலுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக விநி



யோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பித்த இந்த விநியோக நடவடிக்கை, எதிர்வரும், 29 ஆம் திகதி வரை இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கைக்கு 25 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க கடற்படையின் விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கி, பல்வேறு வகையான ஆயுதங்கள் இல்லாத பொருட்களை, ஆழ்கடலில் தரித்து நிற்கும் அமெரிக்க விமானந்தாங்கி கப்பலுக்கு ஏற்றிச் செல்லவுள்ளன.

ஏற்றிச் செல்லப்படும் பொருட்களில் அமெரிக்க படையினருக்கான கடிதங்கள், கடதாசிப் பொருட்கள், உதிரிப் பாகங்கள், கருவிகள் மற்றும் ஏனைய பொருட்கள் அடங்கியுள்ளன என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1624

### கயல்

ஒரு பெண்ணின் கோபத்திற்கு பின்னால் ஒளிந்திருப்பது ஆத்திரங்கள் அல்ல... சொல்ல முடியாத ஏமாற்றங்களும் வலிகளும் மட்டுமே



### வித்தியா

உணரும் வரை உண்மையும் பொய்தான் புரியும் வரை வாழ்க்கையும் புதிர்தான்



### குமுதா

கொண்டு செல்ல ஏதுமில்லை இந்த உலகில் கொடுத்துச் செல்வோம் உண்மையான அன்பை



### ராகவ்

பணம் சம்பாதிக்க நல்லவன் கெட்டவன் எல்லோராலும் முடியும். மனிதர்களைச் சம்பாதிக்க நல்ல மனதுள்ள மனிதனால் மட்டும்தான் முடியும்...



### ப்ரீத்தி

இந்த உலகில் தலைவிதி என்று எதுவும் இல்லை எல்லாம் நமக்கு நாமாகத் தேடிக்கொள்வதுதான்



### சஜித்

உன்னைக் குறைகூறுவது யார் என இரண்டாவதாகப் பார் சொல்லப்பட்ட குறை உன்னிடம் உள்ளதா என முதலாவதாகப் பார்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## நான் தான் பெஸ்ட்



ஓர் ஊரில் மூன்று ரசிகர்கள் இருந்தனர். ஒருவன் உணவு உண்பதில் ரசிகத்தன்மை உள்ளவன். சாப்பாட்டில் சிறிதளவு குறை இருந்தால் கூடக் கண்டு பிடித்து விடுவான். இன்னொருவன் வாசனையின் மூலமே மனிதர்களின் குணங்களை அறிந்து சொல்லக் கூடிய ஆற்றல் படைத்தவன். மூன்றாமவன் நித்திரையின் சுகத்தை அனுபவிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவன். நித்திரை செய்யும் போது சிறு குறை இருந்தாலும் அவனால் சரியாகத் தூங்க முடியாது.

ஒருநாள் இவர்கள் மூவருக்கும் சண்டை ஏற்பட்டுவிட்டது. "தங்களுக்குள் உயர்ந்த ரசிகன் யார்?' என்ற கேள்வி எழுந்தது.

ஒவ்வொருவனும் நான் தான் சிறந்த ரசிகன் என்று கூறினான். இதனால் இவர்களுடைய சண்டை மேலும் அதிகமாகத்தான் ஆயிற்று. முடிவில் மூன்று பேரும் அரசனிடம் சென்று தங்கள் வழக்கைக் கூறினர்.

அரசன் அவர்களைச் சோதனை செய்து பார்த்து, அவர்களில் யார் சிறந்த ரசிகன் என்பதைக் கூறுவதாகக் கூறினான்.

முதலில் சாப்பாட்டு ரசிகனுக்கு, ராஜ உபசாரத்துடன் கூடிய சிறந்த விருந்து ஒன்று அளிப்பதற்கு ஏற்பாடு செய்தான். அரசருக்கு அளிக்கப்படும் அறுசுவை உணவுகளும் கனி வகைகளும் தங்கத் தட்டுகளில் அவனுக்கு பரிமாறப்பட்டன.

சாப்பாட்டு ரசிகன் சாதத்தைப் பிசைந்தான். ஒரு கவளம் உருட்டி வாயருகே கொண்டு போனான்.

"சட்"டென்று அவன் முகம் சுருங்கியது. கையிலிருந்த சாதத்தைத் தட்டில் எறிந்து விட்டுக் கையை கழுவிக் கொண்டான்.

இதைப் பார்த்த அரசன் சாப்பாட்டு ரசிகனைப் பார்த்து, "உனக்கு என்ன குறை நேர்ந்து விட்டது? ஏன் சாப்பிடாமல் எழுந்து விட்டாய்?" என்று கேட்டான்.

"அரசே… சாதத்தில் பிண நாற்றம் அடிக்கிறது. எப்படி அதைச் சாப்பிட முடியும்?" என்றான் சாப்பாட்டு ரசிகன்.

அரசன் சாதத்தை வாங்கி முகர்ந்து பார்த்தான். அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அரசவையிலிருந்த பலரிடம் கொடுத்து முகர்ந்து பார்க்கச் செய்தான். அவர்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை.

கடைசியில் அந்த அரிசியை விற்ற வியாபாரியை வரவழைக்கச் சொன்னான். அவனை விசாரித்தபோது, அவன் அரசர் சாப்பிடக்கூடியதற்கான உயர்ந்த ரக நெல்லை வாங்கிய விவசாயியின் விலாசத்தைக் கூறினான்.

விவசாயியைக் கூப்பிட்டு விசாரித்தான் மன்னன். "அரசே… அவர் சொல்லுவது உண்மைதான். என் நிலத்திற்குப் பக்கத்தில் சுடுகாடு இருக்கிறது" என்று உண்மையை ஒப்புக் கொண்டான் விவசாயி.

இதைக் கேட்ட அரசன், சாப்பாட்டு ரசிகனின் ரசிகத்தன்மையைக் கண்டு வியந்தான்.

அதற்குப் பிறகு, வாசனையினால் மனிதர்களின் குணங்களை அறியும் ஆற்றல் பெற்றுள்ளவனைத் தன்முன் அழைத்து வருமாறு ஒரு சேவகனை அனுப்பினான் அரசன்.

சேவகன் அவனை அழைத்து வருவதற்காக அவன் அருகில் செல்லும்போது, "ஏய், கிட்டே வராதே! உன் மேல் வெள்ளாட்டு நாற்றம் நாறுகிறது" என்றான்.

இதைக்கேட்டு கோபம்கொண்ட சேவகன்… "யாரைப் பார்த்து அந்த மாதிரிச் சொல்கிறாய்?" என்று அந்த ரசிகனை அடிப்பதற்காகச் சென்றான்.

"ஏய், கிட்ட நெருங்காதே! வெள்ளாட்டு நாற்றம் பொறுக்க முடியவில்லை. மரியாதையாக இங்கிருந்து போய்விடு. இல்லாவிட்டால் அரசரிடம் கூறுவேன்" என்றான் இரண்டாவது ரசிகன்.

இதைப் பார்த்த சேவகர் சிலர் அரசனிடம் சென்று இச்செய்தியைக் கூறினர்.

அரசர் இருவரையும் அழைத்து வருமாறு கூறினார்.

"ஏன் ஐயா… எதற்காக இவர் மீது வெள்ளாட்டு நாற்றம் அடிக்கிறது என்று கூறினீர்கள்? நீங்கள் கூறுகிற மாதிரி நாற்றம் அடித்தால் மற்றவர்கள் இவரை நெருங்க விடுவார்களா?" என்று ரசிகனைப் பார்த்துக் கேட்டார் அரசர்.

"எல்லாருக்கும் அது தெரிந்து விட்டால் நான் எப்படி ரசிகத்தன்மை உள்ளவனாக விளங்க முடியும். நீங்கள் வேண்டுமானால் இவனை விசாரித்துப் பாருங்கள். நான் சொல்வது உண்மையா? இல்லையா? என்று தெரிந்து விடும்" என்றான் இரண்டாவது ரசிகன்.

"சேவகனே… நீ எப்பொழுதாவது வெள்ளாடுகளுடன் பழகியதுண்டா? இல்லாவிட்டால் வெள்ளாட்டுப் பாலையாவது சாப்பிட்டிருக்கிறாயா?" என்று சேவகனைப் பார்த்துக் கேட்டார் அரசர்.

"அரசே… இதுவரை நான் வெள்ளாடுகள் இருந்த பக்கமே சென்றது கிடையாது. வெள்ளாட்டின் நாற்றம் எனக்கும் பிடிக்காது. அப்படியிருக்க நான் எப்படி அதன் பாலைக் குடித்திருப்பேன்?" என்றான் சேவகன்.

இதில் திருப்தியடையாத அரசன் அவனது தகப்பனாரை வரவழைத்து விசாரித்தான்.

அவர் முழு விபரம் அறிந்ததும், "அரசே, இந்த ரசிகர் சொல்வது உண்மைதான். சிறுவயதிலேயே இவன் தாயார் இறந்து விட்டாள். குழந்தையாக இருந்த இவனை ஓர் இடைக்குலப் பெண்மணி வளர்த்து வந்தாள். இவன் குழந்தையாக இருந்தபோது வெள்ளாட்டுப் பால் புகட்டியிருக்கிறாள்" என்றார்.

இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த மன்னன், இரண்டாவது ரசிகனையும் பாராட்டினார்.

மூன்றாவது ரசிகன் நித்திரை சுகம் காண்பவன். அவனுடைய ரசிகத் தன்மையைப் பரிசோதிக்க விரும்பினார் அரசர். அழகிய தங்கக் கட்டிலில் ஏழு இலவம் பஞ்சு மெத்தைகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டு வைக்குமாறு கூறினார்.

நித்திரையில் சுகம் காண்பவன் வந்தான். தங்கக் கட்டிலில் படுத்தான். சிறிது நேரம்தான் தூங்கியிருப்பான். உடனே அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான்.

"நித்திரைக்கு எவ்விதப் பங்கமும் வந்துவிடக் கூடாது என்று சகல முன்னேற்பாடுகள் செய்திருந்தும் கூட இவன் தூங்காமல் இப்படிப் புரளுகிறானே!" என்று அதிசயப்பட்டார் அரசர்.

அவனை அழைத்து, "ஏன் பாதித் தூக்கத்தில் எழுந்து விட்டாய்? உனக்கு என்ன குறை?" என்றார்.

"அரசே… என்னவென்று சொல்வேன்? முதுகில் ஏதோ ஒரு பொருள் உறுத்திக் கொண்டிருக்கிறது. அதனால்தான் எனக்குத் தூக்கம் வரவில்லை" என்றான் மூன்றாவது ரசிகன்.

அரசர் சேவகர்களை அனுப்பி, கட்டிலின் மேல் சோதனை செய்து பார்க்குமாறு கூறினார். கட்டிலின் மேல் ஒரு பொருளும் கிடைக்கவில்லை. பின்னர் ஒவ்வொரு மெத்தையாக எடுத்துப் பார்க்கச் சொன்னார். இவ்வாறு ஆறு மெத்தைகளையும் எடுத்த பிறகு, ஏழாவது மெத்தையில் ஒரு தலைமுடி மலருடன் சிக்கிக் கொண்டு இருப்பதைச் சேவகர்கள் கண்டனர். அதை எடுத்துக் கொண்டு வந்து அரசரிடம் கொடுத்தனர்.

அதை வாங்கிப் பார்த்து வியந்த மன்னன், மூன்றாவது ரசிகனை அழைத்து முதுகைக் காட்டுமாறு சொன்னான். அவன் முதுகில் அந்தத் தலைமயிர் பதிந்திருந்த அடையாளம் அப்படியே இருந்தது.

இதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட மன்னன், "உங்கள் மூவருடைய ரசிகத் தன்மையையும், திறமையையும் கண்டேன். நீங்கள் மூவருமே சிறந்தவர்கள் தான். இருப்பினும் முதல் ரசிகனும் இரண்டாவது ரசிகனும் ஐம்புலன்களும் விழித்திருக்கும் போது, தங்கள் புத்திசாதுரியத்தைக் காட்டினர். ஆனால், மூன்றாவது ரசிகனோ தூங்கும் போது ஏற்பட்ட அனுபவத்தைச் சொன்னான். எனவே, மூவரில் நித்திரை சுகம் அறிந்த ரசிகனே தலைசிறந்தவன்" என்ற மன்னன் மூவருக்கும் ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தான். இருப்பினும் நித்திரை சுகம் அறிந்த ரசிகனுக்கு இன்னும் ஏராளமான பரிசுகள் கொடுத்தார்.

## ரயில் தண்டவாளங்கள், பாலங்களில் சிறிய இடைவெளி இருப்பது ஏன்?

வெப்பத்தால் பொருட்கள் விரிவடையும் என்பது விதி. ரயில் தண்டவாளங்களில் இரும்பு வெப்பத்தால் சூடேறும் போது இரும்பின் மூலக்கூறுகள் விரிவடைகின்றன.

இந்த விரிவை "விடப்பட்ட இடைவெளி" சரி செய்து கொள்கிறது. இல்லையெனில் தண்டவாளம் உடையவோ பிறழவோ செய்யும்.

இதே போல்தான் சீமெந்தால் கட்டப்பட்ட பாலங்களிலும் சிறு இடைவெளி விட்டு கட்டப்படுகிறது.

இது அழுத்தத்தையும் சரி செய்து கொள்கிறது. தொழில் சார்ந்த இயந்திரங்களில் பயன்படும் "பேரிங்" போன்றவைகளும் இதே தத்துவத்தால் தான் தயாரிக்கப்படுகிறது.

தேர்மா மீற்றரும் இந்த "வெப்பத்தால் உருபெருக்கம்" என்ற தத்துவத்தில் தான் செயற்படுகிறது! தேர்மா (THERMO) வெப்பம் என்று அர்த்தம்!

## பொது அறிவு தகவல்கள்

- இந்தியாவின் விடிவெள்ளி ராஜாராம் மோகன்ராய்.
- ஈ·கிள் என்ற நட்சத்திரம் சூரியனை விட 8 ஆயிரம் மடங்கு பிரகாசமுடையது.
- மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.
- காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்பு பட்டங்கள் பட்டுத் துணியால் செய்யப்பட்டன.
- மிகப்பெரிய விரிகுடாவான வங்காள விரிகுடாவின் நீளம் 2,250 மைல்கள்.
- ஸ்ரீவெங்கடேஸ்வரா தேசியப் பூங்கா ஆந்திராவில் உள்ளது.

## இல்லாத இனவாதத்தைத் தூண்ட சிலர் முயற்சி

# ஆயுதங்கள் மீட்பு குறித்து விரிவான விசாரணை



## நாடாளுமன்றில் அரச தரப்பு தகவல்

(கொழும்பு)

மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் வீடுகளிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்ட விவகாரம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுப்பதாலேயே ஆயுதங்களை கண்டுபிடிக்க முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார். விசாரணைகளை மூடிமறைக்காமல் நியாயமாக பொலிஸார் நடந்து வருவதாகவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாவனல்ல பிரதேசத்தில் முஸ்லிம் ஒருவரின் வீட்டிலிருந்து ஆயுதம் மீட்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு முன்னர் புத்தளம் பகுதியிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டினார். சர்வதேச நாடுகளின் பின்னணியிலிருந்து இந்த ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாகவும், இது தொடர்பில் விசாரணை நடத்தி பாராளுமன்றத்துக்கு அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேநேரம், விமல் வீரவன்ச இனவாத ரீதியில் கருத்துக்களை முன்வைப்பதாகத் தெரிவித்த பிரதியமைச்சர் நளின் பண்டார, ஆயுதங்களை யார்வைத்திருந்தாலும் அது தவறு என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர், ஆயுதங்கள் யார் வீட்டிலிருந்து எடுக்கப்பட்டாலும் அவர்களின் இனங்களை சுட்டிக்காட்டவேண்டிய அவசியமில்லை. காவியுடை அணிந்தோரும், வெள்ளை ஆடைகளை அணிந்தோரும் இல்லாத தீயை மூட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். கேகாலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் வீட்டிலிருந்தும் அண்மையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன. முஸ்லிம்களின் வீட்டிலிருந்தா, சிங்களவர் வீட்டிலிருந்தா அல்லது தமிழர்களின் வீட்டிலிருந்தா ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன என்பது பிரச்சினையல்ல. ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளமையே பிரச்சினையாகும்.

இவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். இந்த விவகாரத்தை பயன்படுத்தி அரசியல் இலாபம் தேட முயல்வது முற்றிலும் தவறு.

வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி இல்லாத இனவாதத்தைத் தூண்ட சிலர் தயாராகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(ஒலுவில்)

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்புச் செய்யக் கோரி வரும் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் மாலை பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஆரம்பமான மாணவர் பேரணி அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி வரை சென்றடைந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாபைகள் சகிதம் மாணவர்கள் சம்பள அதிகரிப்பை வலியுறுத்திய கோசங்களை எழுப்பினர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையானது நியாயபூர்வமானது எனவும், இத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கிட்டும்வரை தமது ஆதரவை தொடர்ச்சியாக வழங்கி எமது மாணவர் பேரவையின் அழுத்தங்களை அனைத்துத் தரப்பினருக்கும் வழ்ங்க உறுதியாக உள்ளோம் எனக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் தெரிவித் தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஹஜ் விவகாரத்தில் சகல தரப்பின் ஒத்துழைப்பும் வரவேற்கத்தக்கது

### அமைச்சர் ஹலீம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஹஜ் விடயத்தில் சகல தரப்பினரது ஒத்துழைப்பும் வரவேற்கத்தக்கதாகும். இவ்விவகாரத்தில் மீண்டும் அரசியல் உள்ளீர்க்கப்படுவது அழகான வியமல்ல என தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

ஹஜ் கோட்ட அதிகரிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த அரசாங்கத்தில் முஸ்லிம் சமய விவகார அமைச்சு இல்லாத காரணத்தால் ஹஜ் விவகாரத்தில் பல்வேறு குளறுபடிகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. இதற்கு பிரதான காரணமாக இந்த விடயத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருந்ததையே குறிப்பிட வேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரையின் அடிப்படையில் முஸ்லிம் சமய விவகார அமைச்சு மீண்டும் உருவாக்கப்பட்டது.

அந்தவகையில் குறித்த அமைச்சு பொறுப்பு எனக்கு தரப்பட்டது. இதன்பின்னர் நாம் ஹஜ் விவகாரத்தில் அரசியலை கலக்காது சுயாதீன்மாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இருந்தபோதிலும் சில அரசியல்வாதிகள் அதிகாரத்தில் உள்ளவர்கள் சிலரது உதவியுடன் ஹஜ் விடயத்தில் மூக்கை நுழைக்க எத்தனித்தனர். நாம் அதற்கு இடமளிக்கவில்லை.

2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு 2040 கோட்டா மாத்திரமே கிடைத்தது. 2017 ஆம் ஆண்டாகும் போது 2200 ஆக அதிகரித்தது. கடந்த ஆண்டில் 3000 கோட்டாவாக மேலும் உயர்வடைந்தது. இந்நிலையில் இலங்கை முஸ்லிம் சமய விவகார அமைச்சுக்கும் சவுதி ஹஜ் அமைச்சுக்கும் இடையில் பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அவ்வாறான கடும் முயற்சியின் பின்னரே இலங்கைக்கு இவ்வருடம் கடந்த வருடத்தை விட 500 கோட்டாக்கள் அதிகமாக கிடைத்தன.

அத்துடன் போக்குவரத்து ஏற்பாடுகளில் உள்ள சிக்கல்களை நீக்குவது மற்றும் பணப்பரிமாற்றத்தில் ஏற்படும் குளறுபடிகளை தவிர்ப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

இதுதவிர எதிர்வரும் காலங்களில் மேலும் 2000 ஹஜ் கோட்டாவை அதிகமாக வழங்குவதற்கு சவுதி ஹஜ் அமைச்சு உறுதியளித்துள்ளது.

ஹஜ் கோட்டாவை பகிர்ந்தளிப்பதில் சவுதி அரசாங்கம் கடும் சிரமங்களை எதிர்நோக்குகிறது. எனினும், இலங்கை ஹஜ்ஜாஜிகள் மீது சவுதி அரேபியாவுக்கு நல்லபிப்பிராயம் இருக்கிறது. முஸ்லிம் சமய விவகார அமைச்சு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், அரச ஹஜ் குழுவின் முயற்சி மற்றும் இலங்கையர்கள் மீதான சவுதியின் நல்லாபிப்பிராயத்தின் விளைவாக எமக்கு இந்த கோட்டா அதிகரிப்பு கிடைத்திருக்கிறது.

அரசியல் குழப்பகர மான சூழ்நிலையில் இராஜாங்க அமைச்சராக ஏ.எச்.எம். பௌஸி நியமிக்கப்ட்டிருந்தார். அவரும் ஹஜ் விடயத்தில் மிகவும் பொறுப்புடன் செய்பட்டார். அத்துடன் கிழக்கு மாகாண ஆளுநரான ஹிஸ்புல்லாஹ் குறித்த காலப் பகுதியில் அமைச்சராக நியமிக்கப்பட்டபோது அவரின் கீழ் முஸ்லிம் சமய விவகாரமும் உள்ளீர்க்கப்பட்டிருந்தது. இதன்போது மேலும் 2000 ஹஜ் கோட்டாவை அதிகரித்து தருமாறு கோரிக்கை விடுத்து உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இலங்கை ஹஜ் விவகார செயற்பாடுகளை சுயாதீனமாக செயற்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை நாம் செய்து வருகின்றோம். அதனை விரைவுபடுத்தி அரசியல் உட்செல்லாது ஹஜ் விடயத்தில் சுயாதீனத் தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (இ)

## 115 கோடி ரூபா ஹெரோயின் பின்னணியில் தெர்க்மினிஷ்தானை சேர்ந்த இருவர்



(கொள்ளுப்பிட்டி)

கொள்ளுப்பிட்டியில் கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன் தொடர்புபட்ட கடத்தல் நடவடிக்கைகள் தெர்க்மினிஷ்தான் நாட்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவீன சந்தைக் கட்டடத் தொகுதி ஒன்றிலும், சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றிலும் கடந்த 22 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே 115 கோடி ரூபா பெறுமதியான 95 கிலோ 88 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

மேலும் இச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு அமெரிக்க பிரஜைகள், ஒரு ஆப்கான் பிரஜை உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரிடம் பொலிஸ் போதைப் பொருள் த்டுப்பு பிரிவிலிருந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந் நிலையிலேயே குறித்த கடத்தல் நடவடிக்கையில் முக்கியஸ்தர்களாக செயற்பட்ட மேலும் இருவர் தெர்க்மினிஷ்தானை சேர்ந்தவர்கள் எனவும் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## வலம்புரி சங்குடன் மூவர் கைது

(திருகோணமலை)

வலம்புரி சங்கு ஒன்றை விற்பனை செய்ய முற்பட்ட மூன்று பேர் திருகோணமலை நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் 23, 27 மற்றும் 34 வயதுடைய திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

10 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்ய முயற்சி செய்த போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

தட்டிக்கேட்க ஆளில்லை என்றால்
தம்பி சண்டப் பிரசண்டன்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் அலுவலகத்து விருந்தும் புத்தர் சிலை பிரதிர்ஷ்டையும்

தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறியதற்கான காரணம் என்ன என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்பது, தமிழ் அரசியல் தலைமையிடமிருந்து தமிழ் மக்கள் தப்பித்துக் கொள்வதற்காகவே தந்தை செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறியுள்ளார் என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியும்.

பொதுவில் தமிழ் அரசியல் தலைமை என்பது விலை போனதாக, நேர்மையற்றதாக, வல்லமையற்றதாக, தமிழ் மக்களுக்கு விசுவாசமற்றதாக இருக்கும் என்பதை வெளிப்படையாகக் கூறாமல், தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறியிருந்தார் என்பதே ஏற்புடைய உண்மையாகும்.

முல்லைத்தீவு, நாயாறு நீராவியடிப் பகுதியில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு அருகில் புத்தர் சிலை ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தவித கருத்துக்களையும் முன்வைக்காத அதேநேரம், நேற்று முன்தினம் இரவு பிரதமரின் அலரி மாளிகையில் நடந்த விருந்துபசாரத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று இராப்போசனம் உண்டு மகிழ்ந்துள்ளனர் என்ற தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

முல்லைத்தீவு நீராவியடிப் பகுதியில் சட்டவிரோதமாக புத்தர் சிலை நிறுவப்படுவதை அப்பகுதி மக்கள் எதிர்த்து நிற்கின்ற அதேநேரம் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அலரி மாளிகையில் இராப்போசன விருந்துபசாரத்தில் பங்கேற்றனர் எனும் போது,

எங்கள் இனத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறியதன் உட்பொருளை இப்போது விளங்கிக்கொள்வது கடினமன்று.

சரி, நீராவியடியில் புத்தர் சிலை திறக்க, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அலரி மாளிகையில் இராப்போசனம் உண்டனர் என்றால்,

இரணைமடுக்குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று ஒரு சிலர் கோரிக்கை வைக்கின்றனர்.

அதிலும் இரணைமடுக்குளத்து நீரை யாழ்ப்பாணம் எடுத்துச் சென்றால் இரண்டு மாவட்டம் மூன்று மாவட்டமாகி இரணைமடுக்குளத்து நிர்வாகம் மத்திய அரசுக்கும் மகாவலி அதிகார சபைக்கும் போய்விடும் என்ற எச்சரிக்கையையும் அவர்கள் விடுவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

முல்லைத்தீவில் புத்தர் சிலை வைக்க. கூட்டமைப்பு எம்.பிக்கள் அலரி மாளிகையில் உண்டு மகிழ, இரணைமடுக்குளத்து தண்ணீரை தடுக்கின்றவர்களோ சிங்களக் குடியேற்றம் வரும் என்பர்.

இறைவா! என் செய்வோம்! கடவுள்தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறியதன் உள்ளார்த்தம் புரிகிறது.

ஆக, தந்தை செல்வநாயகம் கூறியபடி கடவுள் எம்மை காப்பாற்றட்டும். ஆனால் அது கடவுளுக்கும் கடினமாகவே இருக்கும்

# யாழ். மாநகர எல்லைக்குள் 3 வாரங்களில் 152 டெங்கு நோயாளர்கள் இனங்காணல்

## சுகாதாரப் பிரிவினர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபை எல்லைகுட்பட்ட பகுதிகளில் கடந்த மூன்று வாரங்களில் டெங்கு நோய் தொற்றுக்குள்ளானதாக 152 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆளணிப்பற்றாக்குறை காணப்படுவதால அதை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும் கோரி க்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையின் விசேட அமர்வு நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குநோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட சுகாதாரப் பிரிவினர், வீடுகளுக்குச் சென்று நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஊழியர் பற்றாக்குறை பெரிதும் காணப்படுவதாக தெரிவித்தனர்.

டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகளை விரைவாக செய்ய வேண்டியிருப்பதால் விசேட ஆளணியில் 20 - 25 பேர் வரை உள்வாங்கி தருமாறு கேட்டுக் கொண்டனர். புகை அடித்தல் , வீட்டு தரிசிப்பு, நுளம்பு மருந்து விசிறல் போன்ற பணிகளுக்கு 6 மாத காலத்துக்கு தற்காலிகமாக உள்வாங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். இவர்கள் குறைந்தது சாதாரணதர பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.நகரில் கடந்த டிசெம்பர் மாதம் 173 பேர் டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் இந்த மாதம் கடந்த 3 வாரங்களில் 152 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை வேறு பிரதேசத்திலிருந்துதான் ஊழியர்களைப் பெற்று இந்த தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தமது ஆளணி கொண்டு செய்யும் போது விரைவாக செய்ய முடியும் என சுகாதாரப் பணிமனையினர் கேட்டுக்கொணடுள்ளனர். மேற்குறித்த ஆளணக்கு விண்ணப்பம் கோரி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-9)

## விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 26 ஆம் திகதி வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணியில் வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த மாசிலாமணி புஸ்பராணி (வயது-65) என்ற வயோதிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இவர் நிவாரணம் பெறுவதற்காக மருதங்கேணி பிரதேசசெயலகம் சென்று வெள்ள நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு மீண்டும் வீடு செல்வதற்காக மருதங்கேணி வைத்தியசாலைக்கு அண்மையாக உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நின்றுள்ளார்.

இந்நிலையில் பருத்தித்துறையிலிருந்து கேவில் நோக்கி வந்த தனியார் பேருந்தில் ஏற முற்பட்ட போது பேருந்தின் மிதிபலகையிலிருந்து தவறி வீதியில் விழுந்து படுகாயமடைந்தார்.

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். (இ-60-64)

## இசை நிகழ்ச்சியில் பதற்றம்; 15 பேர் கைது

பண்டாரவளை நகர சபை விளையாட்டரங்கில் இடம் பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் பதற்றத்தை தோற்றுவித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாலை 6 மணி முதல இரவு 10மணி வரை குறித்த இசை நிகழ்ச்சியினை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணிவரை அனுமதி சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும், குறித்த நேரத்தில் இசை நிகழ்ச்சியை பார்வையிட வந்தவர்கள், இசை நிகழ்ச்சியை 10 மணிக்கு நிறைவு செய்ய வேண்டாம் என கோரி கருத்து முரண்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் இசை ரசிகர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதற்றநிலையின் போது இசை கருவிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இசைகுழுவினர் அதனை மறுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 6.30 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில வற்றாப்பளை, முள்ளியவளை, சிலாவத்தையிலிருந்து கொக்கிளாய், மாஞ்சோலை வைத்தியசாலை, முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும II, முல்லைத்தீவு 59வது படைப் பிரிவு (14ESR- 01 மற்றும 14ESR- 02),SFHQ வற்றாப்பளை, குமுழமுனை பல நோக்கு கூட்டுறவுச்சங்கம அரிசி ஆலை, 12 VIR இராணுவ முகாம, 16 ESR இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## 17 அரச நிறுவனங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

17 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பிரதி சபாநாயகர் ஆனந்த குமார சிறி தலைமையில் கூடியது.

இதன்போதே இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 01.07.2017 முதல 30.09.2017 வரையான காலப்பகுதியில் 17 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையே இவ்வாறு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### விசுவாசம்

முழு வளர்ச்சியடைந்து பக்குவப்பட்ட நேர்மையான மனது செயற்படும் வழி விசுவாசம் .விசுவாசம் பிரிவினையும் பூரணமாண மெய்யுணர்வையும் மனதின் வளத்தையும் (சிறப்பையும்) குறிக்கிறது.மனம் நேர்மையற்று சாிய நிலையில இலலாத போது உணாசசி வயபபடடு பரபரபபடைநது விசுவாசமிலலாது சநதாபபவாதியாக சூழ்நிலைக்குத் தக்கவாறு நடக்கிறது.

விசுவாசமின்மை சூழ்நிலைக்கு ஏற்றபடி நடப்பதால் வருகிறது. தன் வாழ்வின் விதி (ஊழ்)பற்றிய குறுகிய பாாவை தான சூழநிலைக
கு ஏறறாறபோல நடககும சந்தர்ப்பவாதித்தனம்.சீரிய நிலையுள்ள பூரணமான மனம நலமான வாழவிறகு இனறியமையாதது. பிாிவினையுள்ள மனம் நம்மைப் படிப்படியாகச் சித்தப்பிரமை மறறும பல உடல -மனக கேடுகளுககு கொணடு போய விட்டுவிடுகிறது.விசுவாசம தான உணமையான பலம. காலப்போக்கில் அது இயற்கையின் ஆதரவையும் பெறுகிறது. (தொடரும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டின் வடக்கு மூலையில் எலுமிச்சையை தண்ணீரில் போட்டு வைத்தால் என்ன நடக்கும்?

சாம்பிராணியும், மருதாணி விதையும், வெண் கடுகு கலந்து வீட்டில், வியாபார ஸ்தலத்தில் தூபமிட தீய சக்திகள், கண்திருஷ்டி, தோஷங்கள் நீங்கி தொழில் முன்னேற்றம் அடையும். அப்போதுதான் மகாலஷ்மி நம்மிடத்தில் நடமாடுவாள்.

முக்கியமான காரியங்கள் பணசம்பந்தமான விஷயங்களுக்கு செல்லும்போது எலுமிச்சம் பழம் ஒன்றை "ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் சக்தியே அருள்வாய் போற்றி ஓம்" என ஆறு முறை உச்சரித்து உடன் வைத்துக்கொள்ளவும்.

பசுமையான வெற்றிலை ஒன்றை எந்த நல்ல காரியங்கள், பண சம்பந்தமான காரியங்கள் போன்றவற்றுக்கு செல்லும் போதும் உடன் வைத்துக் கொள்ளவும். (முற்றும்)

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம்

# புலோப்பளை அதிசயம் சம்பியன்



புலோப்பளை அதிசயம் அணி



விநாயகர் விளையாட்டுக்கழகம்

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கழகங்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுவருவதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். போல்ராஜ் தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 19 ஆம் திகதி பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விநா யகர் விளையாட்டுக்கழகம் மோதி யது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அதிசயம் விளையாட்டுக் கழகம் 2.0 செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென் றது. (க-84)

# இறுதிப் போட்டியில் கல்வியங்காடு பாபா




உடுவில் H2H விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்திய மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு கல்வியங்காடு பாபா விளையாட்டுக் கழக அணி தெரிவாகியது.

அரையிறுதிப் போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து விளையாடிய கல்வியங்காடு பாபா விளையாட்டுக்கழக அணி முதல் களத்தடுப்பைத் தீர்மானித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 32 ஓட்டங்கள் மாத்திரம் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி பெற்றுக் கொண்டது. கல்வியங்காடு பாபா அணி சார்பாக கிருபாகரன் இரண்டு விக்கெட்டுகளை கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு பாபா அணி நான்கு ஓவர்களில் சுரேஸ்குமார் மற்றும் தாருகாஸ் ஆகியோரின் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. (க)

# என் விளையாட்டு வாழ்க்கை முடிவடைகிறது

## அதிவேக மனிதன் உசைன் போல்ட் தெரிவிப்பு



உலகின் அதிவேக மனிதன் என்று அழைக்கப்படும் உசேன் போல்ட், கால்பந்து விளையாட்டை கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

ஜமைக்காவைச் சேர்ந்த பிரபல தடகள வீரரான உசேன் போல்ட், தொழில்நுட்ப கால்பந்தாட்ட வீரராக வேண்டும் என்று கடுமையாக பயிற்சி மேற்கொண்டு வந்தார். அவுஸ்திரேலியாவின் சென்ட்ரல் கோஸ்ட் மரைனர்ஸ் அணியுடன் இணைந்து அவர் விளையாடி வந்தார்.

இதுகுறித்து ஜமைக்கா ஊடக வட்டாரங்கள் பலவிதமாக செய்திகள் வெளியிட்டு வருகின்றன. எனினும், கடந்த மாதம் கால்பந்தாட்ட வீரனாகும் நம்பிக்கை தனக்குள் இன்னும் உயிருடன் இருப்பதாக உசேன் போல்ட் தெரிவித்தார்.

இந்நிலையில், விளையாட்டு வாழ்க்கைக்கு முழுக்கு போட்டு விட்டு வர்த்தகங்களில் இறங்க உள்ளதாக திடீரென அறிவித்துள்ளார். இதுதொடர்பாக உசேன் போல்ட் கூறுகையில்,

'சரியாக எதுவும் கையாளப்படவில்லை என்று நான் கூற விரும்பவில்லை. ஆனால் அந்த இலட்சியத்தை நோக்கி எந்த வழியில் செல்லக் கூடாதோ அப்படி சென்றதாக உணர்கிறேன். நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அதனை வாழ்ந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

கால்பந்து ஒரு நல்ல அனுபவமாக இருந்தது. ஒரு அணியில் ஆடியது மகிழ்ச்சியாக இருந்தது. இது நிச்சயம் தடகளத்தை விட பெரிய வித்தியாசம் கொண்டது என்பதை புரிந்து கொண்டேன். ஆனால் இருந்தவரை கேளிக்கையாக இருந்தது.

என் விளையாட்டு வாழ்க்கை முடிந்து விட்டது. வர்த்தகங்களில் இறங்கலாம் என்று முடிவு எடுத்துள்ளேன். வரிசையில் நிறைய விடயங்கள் காத்திருக்கின்றன. இப்போது தொழிலதிபராக வேண்டும் என்ற இலட்சியம் வந்துள்ளது' என தெரிவித்துள்ளார். (க)

# என் வாழ்க்கை இத்துடன் முடிவடைகிறது

## விபத்திற்கு முன்பு கால்பந்து வீரரின் குறுந்தகவல்




விமான பயணத்தினிடையே மாயமான ஆர்ஜென்டீனா நட்சத்திர கால்பந்து வீரர் எமிலியானோ சாலாவின் கடைசி குறுந்தகவல் வெளியாகியுள்ளது.

விமானம் மாயமாவதற்கு முன்னர் நான்றஸ் அணியின் சக வீரர்களுக்கும் தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் அனுப்பியதே அந்தத் தகவல்.

விமானத்தின் கட்டுப்பாடு இழந்துள்ளதாகவும் அது விபத்தில் சிக்க இருப்பதாகவும் சாலா தமது குறுந்தகவலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ஜென்டீனாவின் முக்கிய நாளேடு ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. மேலும், தாம் பயணப்படும் அந்தக் குட்டி விமானம் தொடர்பில் அவருக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்தது எனவும் தெரியவந்துள்ளது.

சாலா அனுப்பிய 3 குறுந்தகவல்கள் வெளியாகியுள்ளன. முதல் தகவலில், தாம் இறக்க இருப்பதாகவும் விமானம் கட்டுப்பாடு இழந்துள்ளது எனவும் சாலா குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தாம் கார்டிஃப் நோக்கி பயணமாவதாகவும் இந்த விமானம் எப்போது வேண்டுமானாலும் விபத்தில் சிக்கலாம் எனக் குறிப்பிட்ட சாலா,

நண்பர்களே நாளை பகல் தாம் புதிய அணியில் இணைந்து பயிற்சியை துவங்க இருப்பதாகவும் தமது இரண்டாவது குறுந்தகவலில் தெரிவித்துள்ளார்.

என்ன செய்வதன்றே தெரியவில்லை. இனிமேல் என்னைப் பற்றிய தகவல் ஏதும் வெளியாக வாய்ப்பில்லை.

காப்பாற்ற எவரையேனும் அவர்கள் அனுப்புவார்களா? எனவும் தெரியவில்லை.

இனிமேல் அனுப்பினாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை என்றே கருதுகிறேன் என தமது மூன்றாவது குறுந்தகவலில் தெரிவித்துள்ளார்.

நான்றஸ் அணியின் நட்சத்திர வீரரான சாலா தமது புதிய அணியினருடன் இணைவதற்காக தமது சக வீரருடன் குட்டி விமானத்தில் பிரான்ஸில் இருந்து வேல்ஸ் நாட்டிற்கு சென்றுள்ளார்.

ஆனால் சனல் தீவுகளுக்கு மேலே பறந்துகொண்டிருக்கும் போது விமானம் மாயமானதாகக் கூறப்படுகிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஐ.சி.சியின் டெஸ்ட் கனவு அணியில் இலங்கை வீரர்

2018 இற்கான சிறந்த டெஸ்ட் அணி வீரர்களின் பட்டியலை ஐ.சி.சி.வெளியிட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் சிறப்பாக ஜொலித்த வீரர்களின் அடிப்படையில் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் அணி விபரம் பின்வருமாறு.

டாம் லத்தம் (நியூசிலாந்து), திமுத் கருணரத்ன (இலங்கை), கேன் வில்லியம்சன் (நியூசிலாந்து), விராட் ஹோலி (இந்தியா) (அணித்தலைவர்), ஹென்ரி நிகோல்ஸ் (நியூசிலாந்து), ரிஷப் பாண்ட் (இந்தியா) (விக்கெட் கீப்பர்), ஜேசன் ஹோல்டர் (விண்டீஸ்), ககிசோ ரபடா (தென்னாபிரிக்கா), நாதன் லயோன் (அவுஸ்திரேலியா), ஜஸ்பிரிட் பும்ரா (இந்தியா), முகமது அப்பாஸ் (பாகிஸ்தான்). (க)

## மத்திய அரசுடன் இணைந்து...

பிரித்தானியாவின் தென்னாசிய திணைக்களத் தலைவரும் இந்திய ஒருங்கமைப்பாளரும் ஆகிய ஃபேர்கஸ் ஒளல்ட், இலங்கையின் உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் முதல்செயலாளர் போல் ஃகிறீன் மற்றும் அலுவலர் ஜோவிடா அருளாநந்தம் ஆகியோர் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடன் நேற்று சந்திப்பை மேற்கொண்டனர்.

அதில் அண்மையில் ஒரு புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்ததற்கான காரணம் வினவப்பட்டது. அதற்கு நீதியரசர் அவர்கள் மக்களிடம் வாக்குப் பெறச் செல்லும் போது சில முக்கியமான அடிப்படை விடயங்களைப் பெற்றுத் தருவதாக மக்களிடம் கூறிவாக்குப் பெற்றுவிட்டு அவை சம்பந்தமாக அரசாங்கத்துடன் கருத்துப் பரிமாற்றம் செய்யாது மிகவும் குறைந்த அளவு சில உரிமைகளைப் பெற இன்றைய தமிழ்த் தலைவர்கள் முயன்றுள்ளதால் அதை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

மேலும் தமது முதுமையின் போது இவ்வாறான ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பது என்பது சாதாரண விடயம் அன்று என்றும் எனினும் நடைபெறும் விடயங்களை மக்களுக்கு எடுத்துச்சொல்லாவிட்டால் 2000 வருடங்களுக்கு மேலான தமிழ் மக்களின் பாரம்பரியமானது ஒரு சில வருடங்களில் இல்லாதொழிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த ஃபேர்கஸ், பிரித்தானியாவில் பல நாடுகளில் இருந்தும் மக்கள் தம் நாட்டுக்கு வந்து தம்முடைய வாழ்க்கையுடன் ஒன்றிணைந்து ஒற்றுமையாக நாட்டை முன்னேற்றிச் செல்வதாகக் கூறி தனித்துவத்தை நீங்கள் பேண எத்தனிப்பது சரியான ஒரு விடயம் என்று தமக்குப் படுவதாகத் தெரியவில்லை என்று கூறினார்.

அதற்குப்பதில் அளித்த முன்னாள் முதலமைச்சர் வெளிநாடுகளில் இருந்து எத்தனைபேர் வந்தாலும் நாட்டின் அதிகாரம் பிரித்தானிய நாட்டு மக்களின் கைகளிலேயே அமைந்துள்ளது என்றும் ஒரு நாட்டின் அரசியல் நீரோட்டத்தில் மற்றவர்கள் இணைந்து செயற்படுவது வேறு. தம் நாட்டிலேயே இரண்டாந் தரப் பிரஜைகளாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் நிலை வேறு என்றும் கூறினார்.

அதற்கு ஃபேர்கஸ் பிரித்தானியாவின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இவ்வாறான வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள், உதாரணமாகத் தமிழர்கள், பெரும் பங்காற்றி வருகின்றார்கள் என்றும் ஏன் அதேவாறு தமிழ் மக்களும் நாட்டின் அரசியல் நீரோட்டத்தினுள் நுழைந்து பங்காற்ற முடியாது என்றும் கேட்டார்.

அதற்கு முன்னைய முதலமைச்சர் எம் நாட்டிலேயே எம்மை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி விட்டு எம்மை நாட்டின் அரசியல் நீரோட்டத்துடன்சேரச்சொல்வது முறையானதாக எனக்குப்படவில்லை.

கிணற்றின் உள்ளே ஒருவரை வைத்துக் கொண்டு கிணற்றுக்கு வெளியே மற்றொருவர் நின்றுகொண்டு ஏன் என்னோடு ஒருமித்து செயற்பட மறுக்கின்றீர்கள் என்று கேட்பது போல் இருக்கின்றது உங்கள் கேள்வி என்று கூறினார்.

மேலும், தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்பவும் கையளிக்கப்பட்டதன் பின்னர் நீங்கள் கூறுவது போல் எம்மாலும் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நீரோட்டத்தினுள் உள்ளீர்க்கப்பட்டு செயலாற்ற முடியும் என்றும் கூறினார். ஆனால் முதலில் எங்களைக் கிணற்றினுள் இருந்து வெளியே கொண்டு வர வேண்டும் என்று கூறினார். இராணுவத்தை வைத்துக் கொண்டு பக்கச்சார்பான சட்டங்களை வைத்துக் கொண்டு தமிழ் மக்களை அடிமைப்படுத்திக் கொண்டு தமது அரசியல் நீரோட்டத்தினுள் சேருமாறு சிங்கள அரசியல் தலைவர்கள் கோரினார்களேயாகில் அது சமத்துவ அடிப்படையிலான கோரிக்கை அன்று.

எமது உரிமைகளை அரசாங்கம் தந்த பின்னர் நாம் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து செயலாற்ற முடியும். ஆனால் முதலில் எமது தமிழ் பேசும் பிரதேசங்களான வடகிழக்கு மாகாணங்கள் இணைய வேண்டும். சர்வதேச சட்டத்தின் கீழ் உள்நாட்டு சுயநிர்ணய உரிமை எமக்கு இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடகிழக்கு மராகாணங்களுக்கு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் இறுதியில், உங்கள் மக்களின் உரிமைகளுக்காக நீங்கள் போராடுவதாக இருந்தால் அதனை நான் பாராட்டுகின்றேன். உங்கள் எண்ணங்கள் ஈடேற வாழ்த்துகிறேன் என தெரிவித்து சென்றுள்ளார். (ம-9)

## புதிய அரசியல் யாப்பு உருவாக்...

பானிய மற்றும் அவுஸ்திரேலிய தூதுவர்களிடம் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பானிய மற்றும் அவுஸ்ரேலியத் தூதுவர்களை நேற்று வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்தபோதே அவர் இதனை எடுத்துக்கூறியுள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்ரேலியத் தூதுவராக கடமையாற்றி தனது சேவைக் காலத்தை நிறைவுசெய்து செல்லும் பிரைஸ் ஹட்ச்ஸன் நேற்று சம்பந்தனை சந்தித்துள்ளார். அதேபோல், இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சுகியமாவும் கூட்டமைப்பின் தலைவரை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்புகளில் சமகால அரசியல் விடயங்கள் மற்றும் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன. குறிப்பாக புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் இரண்டு பிரதான கட்சிகள் காட்டும் அக்கறை போதுமானதாக இல்லை என கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இணைந்து செயற்பட வேண்டிய தன் அவசியத்தையும் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இரண்டு பெரும்பான்மை கட்சிகளும் புதிய அரசியல் யாப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்கள் குறித்து தமது மக்களுக்கு தெளிவுபடுத்துவதில் அக்கறையின்றி செயற்படுவதாகவும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அதிகார பரவலாக்கம் நேர்மையானதாகவும் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரங்களை உபயோகிக்க கூடிய வகையில் இருத்தல் அவசியம் எனவும் சம்பந்தன் கூறியதாக கூட்டமைப்பின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## போதை வாங்குவதற்காக...

நபர்களை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து ஒரு தொகுதி தங்கத்தினை கைப்பற்றியுள்ளனர்.

குடாநாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் அண்மைய நாட்களில் வழிப்பறிகளும் நகைத் திருட்டுக்களும் இடம்பெற்று வந்தன.

இச் சம்பவங்கள் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டு வந்தனர்.

அதனடிப்படையில் இந்த நகைக் கொள்ளைகளுடன் தொடர்புடைய ஒருவரையும் நகைகளை உருக்கிக் கொடுக்கின்ற ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

இதன் போது சுமார் பத்து இலட்சம் ரூபாய்பெறுமதியான பதினைந்து பவுண் தங்க நகைகளைக் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நகைத் திருட்டுக்கள் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி எம்.இமானுவேல் தலைமையிலான பதில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி திசா நாயக்க, தினேஸ் கருணாநாயக்க, சமுத்திரஜிவ, சூரியகுமார், ஆர்.ரஞ்சித், சேனாரத்ன, சி.குமார, கேரத், பிரபாத், தினேஸ்கரன் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நகைக் கொள்ளைகள் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருவதாகவும் மேற்படி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை குறித்த நபர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதால் அவருக்கு போதைப் பொருளை பெற்றுக்கொள்வதற்கு பணம் தேவைப்படுவதாலேயே இவ்வாறு நகைக் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் விசாரணைகளில்தெரிய வந்துள்ளதாகவும்பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-9.89)

## கொடுப்பனவை...

லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10.30ற்கு கூடிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்ட பொழுதிலும், மேலதிக கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதே போல பொலிஸ் அதிகாரிகளுக்கான போக்குவரத்து கொடுப்பனவையும் அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (ம-3)

## மகிந்த, கோத்தா...

மனைவி சந்தியா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த சந்தியா, மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு எதிராகவும் கருத்து தெரிவித்திருந்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக தீப்பந்தங்களை ஏந்தியும், காளி தேவி வழிபாட்டிலும் ஈடுபட்ட அவர், பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வருகின்ற போதிலும் நீதி கிடைக்கவில்லை என்பதால் இந்த பிரச்சினையை கடவுளிடம் ஒப்புவிக்க தீர்மானித்ததாகவும் இதன் போது தெரிவித்தார். (ம-3)

## கைக்குண்டு...

வடமராட்சி நெல்லியடி நகர் பகுதியில் உள்ள வீட்டு வளவு ஒன்றில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை வீட்டு வளவினை சுத்தம் செய்த போது பழமை வாய்ந்த கைக்குண்டு காணப்பட்டது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. (ம-60)

## மீண்டும் பாஸ்...

வதற்கான பாஸ் நடைமுறை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பாஸ் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொண்ட பின்னர், பாஸ் நடைமுறைப்படுத்துவது தொடர்பில், வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்டோரிடம் கருத்துக்களும் பெறப்பட்டன.

தாதியர்கள் மற்றும் நோயாளர்களின் கருத்துக்களுக்கு இணங்க எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட பாஸ் நடைமுறைப் படுத்தவுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ்போதனா வைத்தியசாலையில் 1250 ற்கும் மேற்பட்ட படுக்கைகள் உள்ளன. நோயாளர்கள் விடுதிகளில் சிகிச்சை பெறுகின்ற போதும், 3 வேளைகளிலும்பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த சில வருடங்களாக ஒரு நோயாளரை பார்வையிட அதிகமானவர்கள் வருவதனால், நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றதுடன், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

ஒரு நோயாளரைப் பார்வையிட அதிகமான பார்வையாளர்கள் வந்து அந்த நோயாளரை சுற்றி நிற்கும் போது, அருகில் உள்ள நோயாளர்கள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்த விடயங்களை வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் ஒரு நோயாளியைப் பார்க்க நோயாளிக்கு அருகில் இருவர் மாத்திரமே செல்ல முடியும். பலர் வைத்தியசாலைக்கு வருகை தந்தாலும், அவர்கள் வைத்தியசாலையின் ஒரு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்து, நோயாளியைப் பார்க்கச் சென்றவர் வந்ததன் பின்னர், இருவராக சென்று பார்வையிட முடியும்.

வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வழங்கப்படும் பாஸை பார்வையாளர்கள் கொண்டு சென்று இருவராக பார்வையிடுமாறும், அவ்வாறு பார்வையிடுவதனால், நோயாளர்களுக்கு ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் மற்றும் காற்றோட்டத்தை வழங்க முடியுமென்பதுடன், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் நோயாளிக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கும் உதவியாக இருக்கும் .

எனவே, பாஸ் நடைமுறையைப் பின்பற்றி நோயாளிக்கு தகுந்த சிகிச்சை அளிக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் பொது மக்களிடம் வைத்தியசாலைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## தவறான கண்ணோட்டத்தை...

வர் தனது தனிப்பட்ட அரசியல் நோக்கத்தை நிறைவேற்றி கொள்ளும்முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஆகவே பிரச்சினைகளை கண்டு அஞ்சாமல் அரசியல் அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிட கூடாது என சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராஜகிரியவில் அமைந்துள்ள சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1528 திகதி 2019/01/24

Q H X

வெற்றி இலக்கங்கள்: 06 07 29 53 போனஸ் இலக்கம்: 58

### கொவிசெத

திகதி 2019.01.24
சீட்டிழுப்பு இலக்கம் 2014

ஆங்கில எழுத்து: T
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 27 39 70 73

### நீரோகா

திகதி 2019/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 503

லக்கினம்: விருட்சகம்
வெற்றி இலக்கங்கள்: 35 39 43 54 49

### மஹஜன சம்பத

திகதி 2019/01/24
சீட்டிழுப்பு இலக்கம் 3840

ஆங்கில எழுத்து: G
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 8 4 0 5 7

தேசிய லொத்தர் சபை

## 6 ஆயிரத்து 972 லீற்...

றர் எதனோல் (தூய மதுசாரம்) ஏழாலை பகுதியில் நேற்று அதிகாலை விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழில் முதன்முறையாக இவ்வாறு பெருந் தொகையான எதனோல் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு வரும் கிளிநொச்சி நீதிமன்றால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது சந்தேக நபருக்கு பிடிவிறாந்து வழங்கப் பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை மேற்கு ஏழாலை பகுதியில் உள்ள காணி ஒன்றில் கடந்த சில மாதகாலமாக பாரவூர்தி ஒன்று நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த பாரவூர்தியில் இருந்து சந்தேகத்துக்கு இடமான முறையில் பொருட்கள் எடுத்துச் செல்லும் நடவடிக்கை இடம்பெறுவதாக மல்லாகம் இராணுவமுகாமில் உள்ள இராணுவ புலனாய்வுத்துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினருக்கு அறிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் ஏழாலைப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்பை முன்னெடுத்த விசேட அதிரடிப்படையினர், சில மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த குறித்த பாரவூர்தியை சோதனை செய்துள்ளனர். பாரவூர்தி நிறுத்திவைக்கப்பட்டிருந்த காணி உரிமையாளரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவர் இது சுன்னாகம் பகுதியில் உள்ள மதுபான சாலை உரிமையாளருடையது என்றும் அதற்குள் என்ன இருக்கிறது என தெரியாது எனவும் கூறியுள்ளார். எனவே குறித்த நபர் ஊடாக உரிமையாளருக்கு தகவல் அனுப்பியதன் அடிப்படையில் பாராவூர்தியை திறப்பதற்கு மேலும் ஒரு நபர் அங்கு வந்துள்ளார். இதன்போதே 20 லீற்றர் கொள்ளளவுடைய 371 கான்களில் பெருந்தொகையான எதனோல் (தூய மதுசாரம்) இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

அதனடிப்படையில் காணி உரிமையாளரையும் குறித்த பாரவூர்தியினை திறந்த நபரையும் அதிரடிப்படையினர் உடனடியாக கைது செய்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

யாழ்.குடாநாட்டுக்கு விநியோகிக்கப்படும் பனம் சாராயத்துக்கு கலப்படம் செய்வதற்காகவே கண்டியில் இருந்து இந்தப் பெரும் தொகை எதனோல் மதுபானக் கடை உரிமையாளரால் எடுத்துவரப்பட்டது என ஆரம்ப விசாரணைகளில் மூலம் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் குறித்த சுன்னாகம் மதுபானக் கடை உரிமையாளர் தலைமறைவாகியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண மதுவரித் திணைக்களத்தினரின் விசாரணைக்காக சந்தேகநபர்கள் இருவரும் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கைது செய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மூன்றாவது சந்தேக நபருக்கு பிடிவிறாந்து மன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மதுவரித்திணைக்களத்தில் வைத்து குறித்த எதனோல் 332 கான்களில் 21 லீட்டர் வீதம் சமப்படுத்தி பகிரப்பட்டு சீல் செய்து நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

தூய மதுசாரம் போதையை ஏற்படுத்தும். அத்துடன், மதுசாராயத்துக்கு அடிமையாக்கும் பொருளாகவும் காணப்படும். எத்னோல் நச்சுத் தன்மையானது. அத்துடன், குறிப்பிட்ட அளவைவிட எதனோல் அதிகரித்தால் அந்த சாரயத்தை பருகுவோரின் உடல் நிலை மிகக் கடுமையாகப்பாதிக்கும் என ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-9,10,101)

## சிங்கப்பூர் ஜனாதி...

நேற்று வியாழக்கிழமை இடம்பெற் றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் வலய சுற்றாடல்துறை அமைச் சர்கள் மற்றும் சுற் றாடல்துறை சார்ந்த நிறுவன தலைவர்கள் மாநாட்டில் முதன்மை உரையாற்றுவதற்காக ஜனாதிபதி சிங்கப்பூருக்கு பயணம் மேற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வர்த்தக கண்காட்சி...

வற்றின் ஆதரவுடன், யாழ்ப்பாணம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சும் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் இந்த சர்வதேச வர்த்தக கண்காட்சி நடைபெறவுள்ளது.

சுமார் 350 மேற்பட்ட கண்காட்சி கூடங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. உள்ளூர் மற்றும் சர்வதேச உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் காட்சிக்கூடங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கடந்த ஆண்டு நடைபெற்ற 9ஆவது சர்வதேச வர்த்தக கண்காட்சியில் 60 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிட்டமையினால், இந்த வருடமும், 60 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை எதிர்பார்ப்பதாகவும், கண்காட்சி நடைபெறும் 3 தினங்களும் பாடசாலை மாணவர்கள் இலவசமாக கண்காட்சி கூடத்தைப் பார்வையிட முடியும்.

தொழில் வழிகாட்டி சேவைகள், விசேட உணவுவகைகள், மருத்துவ ஆலோசனைகள், கட்டட நிர்மாணப் பொருட்கள், அழகுக்கலை, அழகு சாதனப்பொருட்கள், உள்ளூர் உற்பத்திகள் எனப் பல்வேறு உற்பத்தி களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணியளவில், யாழ். பொது நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டு யாழ் மாநகர சபை வளாகத்தில் கண்காட்சிக் கூடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக, யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-101)


### கருத்தரங்குகள்

அதிபர் சேவை தரம் – 3

Feb 10 பரீட்சைக்கு
26/1, 27/1, 2/2, 3/2, 4/2, 9/2
திகதிகளில்
காலை 9.00 – 3.00 மணி வரை

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்

Feb 17 பரீட்சைக்கு
27/1, 3/2, 9/2, 10/2
காலை
9.30 – 2.30 மணி வரை

தொடர்புகளுக்கு :
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரிவீதி, கொமர்சல் வங்கியருகில்)
(C-5926)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### விற்பனைக்கு

Lion Pomeranian இன நாய்க்குட்டி 4 விற்பனைக்குண்டு. 3 ஆண், ஒரு பெண்.
(2 ஊசி போடப்பட்டுள்ளது).
தொடர்பு : 076 604 8878, 070 435 1110
(7268)

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள SRI MARUTHI அச்சகத்துக்கு Photoshop, Coreldraw, Design அனுபவம் உள்ளவர்கள் தேவை.
SRI MARUTHI PRINTERS
555, Navalar Road, Jaffna
(Near Kailasappillaiyar Kovil)
TP : 021 454 5044, 077 791 7680
(C-5294)

### வேலையாட்கள் தேவை

- யாழ்ப்பாணம் அரசடி வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கற் இல் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. உங்கள் சுயவிபரக் கோவையுடன் பிற்பகல் 3.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடையில் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும். அனுபவம் உள்ளவர்களுக்கும் மும்மொழி தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு : அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

- A/L வர்த்தக பாடத்தில் சித்தியுடைய Trainee Accountant உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் நேரில் வரவும்.
Sanjeys A-Z Mart
No.100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
(C-5288)

### வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில் 2 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு :
077 999 4603

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-5187)

### வேலைவாய்ப்பு

- வீட்டில் வைத்து கணினி ரைப்செற்றிங் செய்து தரக்கூடியவர் தேவை. (A4 - 60/=)
- கணக்கு பதிவு செய்யக் கூடியவர் தேவை (பெண்) (வேலையிடம் – யாழ் நகரம்)

077 217 4741 / 021 221 9815
(7265)

### வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் வெல்டிங், ரிங்கறிங், கார் பெயின்ரிங் செய்யும் நிலையத்திற்கு வேலையாட்கள் உடன் தேவை. அனுபவத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும். சான்றிதழ்களுடன் வரவும்.
தொடர்பு : 077 354 5115
(C-5289)

### FLC FRENCH LANGUAGE CENTRE



பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.
(C-5186)

### வாருங்கள்!

இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை







25th 26th 27th
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna
www.jitf.lk jitf.lk

PLATINUM SPONSOR: INSEE CEMENT
GOLD SPONSOR: Browns A Heritage of Trust
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY
OFFICIAL PARTNERS
HEALTH CARE: ASIRI HEALTH
FOOD
BANKING: PEOPLE'S BANK
TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel
FERTILITY CARE: NINEWELLS
ROOFING: i-ROOF
ONLINE MEDIA: MC Creatives
PRINT MEDIA
RADIO
ELECTRONIC MEDIA: DAN
SUPPORTED BY: SRI LANKA
ENDORSED BY: NCE
(7150)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.